www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்


மலர் 87 இதழ் 49 2025 மார்ச் 09 - மார்ச் 15 16 பக்கங்கள் விலை: ரூ.15

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம்

# அநீதியான தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தீர்மானம்





**கூட்டாட்சி அமைப்புக்கும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய, மக்கள் தொகை அடிப்படை யிலான 'நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்புக்கு' கடும் எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.**

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மார்ச் 5 ஆம் தேதி அன்று அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில், அதிமுக, காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, வி.சி.க., பாமக, தேமுதிக, தவெக உட்பட 56 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பாஜக, த.மா.கா, நா.த.க உள்ளிட்ட 5 கட்சிகள் கலந்துகொள்ளவில்லை.

### தலைக்கு மேல் கத்தி

இந்தக் கூட்டத்தில் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படுவதற்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது, "தமிழ்நாடு மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை உணர்த்துவதற்காகத்தான் இந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். தொகுதி மறுசீரமைப்பு எனும் கத்தி தென்னிந்தியாவின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் தமிழ்நாடு கடுமையாகப் பாதிக்கப்பட இருக்கிறது.

மக்கள் தொகை அடிப்படையில் மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைகளின் இடங்கள் குறையும் என்று சொல்வது, மக்கள் தொகை கட்டுப்பாடு எனும் கொள்கையை முனைப்பாக செயல்படுத்தி நாட்டு வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய மாநிலங்களுக்கு தரப்படும் தண்டனையாகத்தான் அமையும்.

இந்தத் தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கே அபாயமான செயல். இதில் நமக்குள் கருத்து மாறுபாடு நிச்சயமாக இருக்காது என்று நினைக்கிறேன். இருக்கக் கூடாது என்றும் விரும்புகிறேன். இது இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்புக்கும் தென்மாநிலங்களின் அரசியல் உரிமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இது இந்திய ஜனநாயகத்தில் தமிழ்நாட்டுக்கு கிடைக்கும் அரசியல் பிரதிநிதித்துவ உரிமை மீதான நேரடி தாக்குதல்.

### சமநீதியற்ற தொகுதி மறுசீரமைப்பு

இப்படி ஒரு சமநீதியற்ற, அநீதியான தொகுதி மறுசீரமைப்பு செயல்படுத்தப்பட்டால் இந்திய அரசியலில் தமிழ்நாட்டின் குரல் நெரிக்கப்படும். தமிழ்நாட்டின் நலன் மற்றும் தமிழ்நாட்டு மக்களின் நலன் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் நம் மாநிலத்திற்கு இருக்கும் பலம் குறைக்கப்படும். 39 எம்.பி.க்கள் இருக்கும் போது எழுப்பும் குரலையே ஒன்றிய அரசு ஏற்க மறுக்கும் நிலையில், இந்த எம்.பி.க்கள் எண்ணிக்கை இன்னும் குறைந்தாலோ, குறைக்கப்பட்டாலோ அது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட அழிக்க முடியாத அநீதியாக மாறும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

> **கூட்டு நடவடிக்கை குழு**
>
> கோரிக்கைகளையும் அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்களிடம் இந்தப் பிரச்சனை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு ஒன்றை அமைத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் அனைத்து கட்சி கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் பேசியதைத் தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் அனைவரும் உரையாற்றினர். 58 கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

### இரா.முத்தரசன் பேச்சு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி ஆகியோர் பங்கேற்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றினார்.

அப்போது, "தொகுதி மறுசீரமைப்பின் பேராபத்தை உணர்ந்து, தமிழ்நாட்டின் உரிமையைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்த அனைத்து அரசியல் கட்சிகளையும் உடனடியாக அழைத்து இந்தக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சருக்குப் பாராட்டுக்கள். தொகுதி மறுசீரமைப்பு மூலம் தமிழ்நாட்டில் தொகுதிகள் குறைக்கப்படாது என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்கிறார். மற்றொருபுறம் விகிதாச்சார முறையில் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்படும் என்கிறார். இதில் எது உண்மை?

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மிகச் சிறப்பான முறையில், மற்ற எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாடு தீவிர முயற்சி எடுத்து கட்டுப்படுத்தி சிறப்பான பங்களிப்பை செலுத்தி உள்ளது. சிறப்பாக செயல்பட்டதற்காக தண்டிப்பது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் தொகை அடிப்படையில் தான் தொகுதி மறுசீரமைப்பு செய்ய முடியும் என்று ஒன்றிய அரசு மூர்க்கத்தனமாக முடிவெடுக்கும் என்றால், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் அதை எதிர்த்துப் போராட வேண்டும். தொகுதி மறுசீரமைப்பால் பெரிதும் பாதிக்கப்படும் தென்மாநிலங்களையும் ஒன்றிணைத்து நியாயத்திற்காக, உரிமைக்காகப் போராடி வெற்றி பெறுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று இரா.முத்தரசன் தெரிவித்தார். ■

---

**நாங்கள் எங்கு இல்லை, சீமானே!**
**தலையங்கம்**

போராட்டங்கள் இவருக்கு பத்திரிகைகளில் படிக்கிற செய்தி! ஆனால் கம்யூனிஸ்டுகளுக்கோ போராட்டமே வாழ்க்கை. எந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் இல்லாமல் போய்விட்டார்கள்? கம்யூனிஸ்டுகள் ஒருங்கிணைக்காமல், வழிநடத்தாமல், உதவிக்கு நிற்காமல் இந்த நாட்டில் பெருவாரியான போராட்டங்களும் நடைபெற்றதில்லை.

... பக்கம் 4

**பாஜகவின் சகுனி வேலை!**
**த.லெனின்**

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தச் சொன்னது மத்திய அரசு. அதனால் கட்டுப்படுத்தியது தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள். கட்டுப்படுத்த தவறிய வட மாநிலங்கள் உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் போன்றவற்றிற்குப் பரிசும் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்குத் தண்டனையும் அளிப்பதா?

... பக்கம் 5

**கண்ணிய வாழ்க்கை கருணையல்ல**
**கலை.அஸ்வினி**



சுதந்திரப் போராட்டங்களில், 192829 பொது வேலைநிறுத்தத்தின் போது கம்யூனிஸ்ட் தலைமையிலான தொழிற்சங்க இயக்கத்தில் இருந்த பெண்கள் பருத்தி ஜவுளி ஆலைகளின் வாயில்கள் முழுவதும் பெண்கள் மட்டுமே திரண்டு மறியலில் ஈடுபட்டனர்.

... பக்கம் 6

**10 பணக்காரர்களுக்கு 57% வருமானம்**
**வ.மணிமாறன்**

நம் நாட்டில் ஏற்றத்தாழ்வான, சமச்சீரற்ற வளர்ச்சி அதிகரித்து வருகிறது. நாட்டின் மொத்த வருவாயில் முதல் 10 பணக்காரர்களுக்கு 57.7 விழுக்காடு வருமானம் சென்று விடுகிறது. இது 1990 ஆம் ஆண்டு 34 விழுக்காடாக இருந்தது.

... பக்கம் 7

**இந்தியை மறுக்கும் உரிமையையும் தரவேண்டும்**
**மே.து.ரா.**

இந்தி என்ற மூன்றாவது மொழியினை ஏற்றுக்கொண்டால்தான், நவோதயா, பிரதமர் மேன்மைப் பள்ளி ஆகியவற்றைத் தமிழ்நாட்டில் தொடங்க முடியும் என்ற கட்டுப்பாட்டையும் இப்போது தளர்த்திவிடுவார்களா என்ற வினாவுக்கு விளக்கம் எதுவும் கிடைக்கவில்லை.

... பக்கம் 10

ஜனசக்தி

கட்சிக் கடிதம்

# ரத்த தானம் வழங்கிடுவீர்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நமது அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் ஆகிய இரு பெரும் அமைப்புகள் முக்கியமானதோர் முடிவை மேற்கொண்டுள்ளது.**

ஆம் மார்ச் 23ஆம் நாள் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான மாணவர்களும், இளைஞர்களும் ரத்ததானம் வழங்குவது என்று முடிவு செய்துள்ளனர்.

அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள நாள் நாட்டின் மிக முக்கியமான நாளாகும். விடுதலைப் போராட்டத்தில் நாடு முழுவதுமுள்ள மாணவர்களை, இளைஞர்களை, பொதுமக்களை போர்க்களத்தில் கிளர்ந்தெழச் செய்திட்ட நாளாகும்.

வெள்ளை ஏகாதிபத்திய அரசை எதிர்த்துக் களம் கண்ட காளையர்கள் மாவீரர்கள் எனப் போற்றப்பட்ட பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவருக்கும் அந்நிய அரசு தூக்குத் தண்டனை விதித்தது.

மூவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாள் மார்ச் 24 என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே மார்ச் 23ஆம் நாள் மரண தண்டனையை நிறைவேற்ற அரசு முடிவு செய்தது.

24 ஆம் நாள் மக்கள் பெரும் திரளாய்க் கூடுவார்கள் என்றெண்ணிய அந்நிய அரசு முதல் நாளே அவர்களுக்கு முடிவு கட்டுவது என்று முடிவு செய்துவிட்டது.

மார்ச் 23 ஆம் நாள் கொட்டடியில் அடைக்கப்பட்டுள்ள பகத்சிங்கைத் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமாகி அவரது அறை நோக்கிச் சென்றார்கள்.

அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்ற அதிகாரிகள் பகத்சிங்கிடம் செய்தியைக் கூறி தூக்கு மேடைக்கு அழைக்கின்றனர்.

அம் மனிதனோ நாளை தானே எனக்குத் தூக்கு தண்டனையை நிறைவேற்றப்பட வேண்டும். இன்றே ஒரு நாள் முன்னதாகவே வந்து விட்டீர்களே என வினவ.

இல்லை, இல்லை இன்றே உங்களின் தண்டனையை நிறைவேற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது என்கின்றனர்.

ஓ அப்படியா பரவாயில்லை வருகிறேன் சற்று பொறுங்கள், நான் இப்போது மாமேதை லெனினுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றேன். அவரின் நூலான 'அரசும் புரட்சியும்' என்ற நூலைப் படித்துக்கொண்டிருக்கிறேன்.



இன்னும் சில பக்கங்கள் பாக்கியுள்ளன. அவைகளைப் படித்து முடித்து விடுகிறேன். அதன் பின்னர் வருகிறேன் எனக் கூற அதிர்ந்து போன அதிகாரிகள் பகத்சிங் படித்து முடிக்கும் வரை காத்திருந்தனர்.

மரணத்திற்குச் செல்பவன் புத்தகத்தைப் படித்தால் என்ன? படிக்காமல் விட்டால் என்ன? என்று கேட்கலாம். இல்லை இது மிக முக்கியமான நூல். புரட்சிக்காரன் எழுதிய நூல். இதனை இப்போது படித்து அதில் உள்ள செய்திகளை அறியாமல் விட்டால், மரணத்திற்குப் பின்னரா படிக்க முடியும்.

மரணத்தின் தறுவாயிலும் புத்தகம் படிக்க முடிந்தது என்றால் அவன் எத்தகைய நெஞ்சுரம் மிக்கவனாக இருக்க முடியும்!

படித்து முடித்தான்.நான் முடித்து விட்டேன் புறப்படலாமா? என விருந்துக்குச் செல்வது போல் அதிகாரிகளைக் கேட்டான்.அதிகாரிகள் வாய்திறந்து பேச இயலாத சக்தி பெற்றவர்களாகத் தலையை அசைத்தார்கள். அதிகாரிகள் புடைசூழ மாவீரனுக்குரிய புன்னகையோடு கம்பீரமாக நடந்தான்.

தூக்கு மேடைக்குச் செல்வதற்கு முன்னர், தண்டனைக் கைதிகளின் உடல் எடையைச் சோதிப்பது வழக்கம். பகத்சிங்கை சோதித்தார்கள். அவனது எடை முன்னைக் காட்டிலும் அதிகரித்திருப்பது கண்டு அதிகார வர்க்கமும், மருத்துவர்களும் ஆச்சரியக் கடலில் மூழ்கித் திகைத்து நின்றார்கள்.

அவனது உடல் எடை குறையவில்லை, உடல் நடுங்கவில்லை, முகத்தில் சோகமில்லை, வருத்தமில்லை, கம்பீரம் குறையவில்லை. அவன் தெளிவாக இருந்தான். ''என் தாய்நாட்டின் விடுதலைக்காக என் உயிரை தானம் செய்கிறேன். இதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை. மாறாகப் பெருமிதத்தோடு தூக்குக் கயிற்றை முத்தமிடக் காத்திருக்கிறேன்'' என்பது போன்ற அவனது அனைத்துச் செய்கைகளும் இருந்தன.

இதற்கு முன்பு வெள்ளை அரசுக்கு அவர்கள் எழுதிய கடிதத்தில் தாங்கள் அரசியல் கைதிகள் தங்களைச் சாதாரண குற்றவாளிகளைப் போல தூக்கிலிடாமல் சுட்டுக் கொல்ல வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருந்தனர். அரசு அதனை நிராகரித்து விட்டது.

மாவீரனுக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றிய நாள்தான் மார்ச் 23. அத்தகைய நாளில்தான் நமது தோழர்கள் இரத்ததானம் வழங்க முடிவு செய்துள்ளார்கள்.

மனிதர்கள் மரணத்திற்குப் பின்னர் கண்களை தானம் செய்யலாம். அக்கண்கள் இருவருக்குப் பார்வையைத் தரும்! மனிதர்கள் மரணத்திற்குப் பின்னர் உடலை மருத்துவமனைக்கு தானம் வழங்கலாம். அவ்வாறு வழங்குவதன் மூலம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்களின் பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

மரணத்திற்குப் பின்னர் உடல் எரிக்கப்படுகின்றது அல்லது புதைக்கப்படுகின்றது. இதனால் என்ன பயன்?

புதையுண்டோ அல்லது எரித்துச் சாம்பலாகும் இரு கண்களை தானம் வழங்குவதன் மூலம், இறந்த பின்னரும் அவரது இரு கண்கள் பார்வையற்றவர்களுக்குப் பொருத்தி அவர்கள் பார்வையைப் பெறுகின்றார்கள். இறந்த பின்னரும் அவர்களது கண்கள் உயிருடன் இருக்கின்றன. இறந்த பின்னரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மரணத்திற்குப் பின்னர் உடல் மருத்துவக் கல்லூரிக்கு வழங்குவதன் மூலம், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. நமது மதிப்புமிக்க தலைவர் துப்பாக்கித் தோட்டாக்களைத் தனது கைகளில் காலம் முழுவதும் சுமந்தவர் தியாகச் சீலர் தோழர் ஏ.எம்.கோபு வின் மரணத்திற்குப் பின்னர், அவரது விருப்பப்படி, சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அண்மையில் இயற்கை எய்திய சிவகங்கை மாவட்ட தலைவர்களில் ஒருவரான தோழர் முத்துராமலிங்கம் (மாதர் சம்மேளன மாநிலச் செயலாளர் மு.கண்ணகியின் கணவர்) இயற்கை எய்திய நிலையில் அவரது விருப்பப்படி சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

கோவை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் மௌனசாமி, தன் மரணத்திற்குப் பின்னர் தனது உடலை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கிட வேண்டுமென இப்போதே உயில் எழுதி வைத்து விட்டார்.

இவைகள் எல்லாம் நல்லதொரு முன்னுதாரணங்கள். வாழும்போது நாம் அச்சமின்றி இரத்ததானம் செய்யலாம். அவ்வாறு நாம் வழங்குவதால் எவ்விதப் பாதிப்பும் கிடையாது.

விபத்துகள், அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு இரத்தம் தேவைப்படுகின்றது. நோய்களுக்கு ஏற்றவாறு, அறுவை சிகிச்சைக்கு ஏற்றவாறு ரத்தம் தேவைப்படுகின்றது.

தேவைப்படுவோருக்கு இரத்தம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

அவதி மட்டுமல்ல, விலை மதிக்க முடியாத உயிர் போகின்றது அத்தகைய உயிர்களைக் காக்கவும் தேவைப்படுவோருக்கு ரத்தம் வழங்கவும் மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கியில் ரத்தம் சேமித்து வைக்கப்படுகின்றது. அத்தகைய சேமிப்பிற்கு ரத்தம் வழங்க, தானமாக வழங்க நமது மாணவர்களாலும் இளைஞர்களாலும் முன் வந்திருப்பது வரவேற்பிற்கும் பாராட்டுக்கும் உரியதாகும்!

இளம் தோழர்கள் மட்டுமல்ல மூத்தவர்களும் வழங்கலாம். வழங்கிட வாரீர்! மார்ச் 23 ஆம் நாள்!

மீண்டும் சந்திப்போம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## ஆளுநர் கருத்துத் திணிப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்டார்ட் அப் நிறுவன முதலீட்டாளர்கள் மத்தியில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, புதிய தேசியக் கல்விக் கொள்கையைத் திணிக்கும் நோக்கத்துடன் விஷமத்தனமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். இதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"மாநில அரசின் கடுமையான இரு மொழிக் கொள்கை காரணமாக அண்டை மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுடன் ஒப்பிடும்போது, இந்தப் பிராந்திய இளைஞர்கள் வாய்ப்புகளை இழந்தவர்களாக உணர்கிறார்கள். துரதிருஷ்டவசமாக இந்தியை எதிர்க்கிறோம் என்ற பெயரில் எந்தவொரு தென்மாநில மொழிகளையும்கூடப் படிக்க அனுமதிக்கப்படாதவர்களாக அவர்கள் உணர்கிறார்கள். இது உண்மையிலேயே நியாயமற்றது, மொழியைப் படிப்பதற்கான தேர்வு நமது இளைஞர்களுக்கு இருக்க வேண்டும்." ஆளுநரின் இந்தக் கருத்து அடிப்படை ஆதாரமற்றது,

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாடு கடைப்பிடித்து வரும் இரு மொழிக் கொள்கையால் எந்தப் பின்னடைவும் ஏற்படவில்லை, பல துறைகளிலும் முன்னேறி முதன்மை இடத்துக்கு வந்துள்ளது. சர்வதேச அளவில் நவீனத் தகவல் தொழில்நுட்பத் துறையில் சுந்தர் பிச்சை, பன்னாட்டுக் குழும நிறுவனமான பெப்சி கம்பெனியின் முதன்மைச் செயல் அலுவலராக இந்திரா நூயி, இஸ்ரோ தலைவர் முனைவர் வி.நாராயணன் இப்படி ஏராளமான பெயர்களைப் பட்டியலிட முடியும். இவை பற்றிய தகவல்கள் பெறுவதில் ஆளுநர் ஆர்வம் காட்டவில்லை.

தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை மற்ற எந்த மொழிகள் மீதும் வெறுப்புக் காட்டுவதில்லை, யார் எந்த மொழியை, எத்தனை மொழிகளைக் கற்க விரும்பினாலும், அதனை தடுப்பதும் இல்லை. தமிழ்நாட்டில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மொழிகளையும் கற்று வருகிறார்கள் என்பதை ஆளுநர் அறிந்து கொள்ள வேண்டும்.

புதிய தேசியக் கல்விக் கொள்கை உயர்தனி செம்மொழியாம் தமிழ் மொழி மீது ஆதிக்கம் செலுத்தி, அதனை அழித்தொழிக்கும் நோக்கத்துடன் இந்தி மொழி திணிப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. புதிய தேசியக் கல்விக் கொள்கை தமிழ் மொழியை நகர்த்தி விட்டு, இந்தி மொழியைத் திணிக்கும் நோக்கத்தை உள்ளடக்கி இருப்பதை ஆளுநர் மூடி மறைத்துப் பேசி வருகிறார். இந்தி படித்தால் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கும் வேலை வாய்ப்புகளில் பயனடையலாம் என்ற புனைவு தகவலை வெளியிடும் ஆளுநர், நாடு முழுவதும் 1529 வயது இளைஞர்களில்

10 சதவீதத்திற்கும் அதிகமானோர் வேலையின்மை வேதனைத் தீயில் வெந்து மடிந்து வருவதை மறைக்க விரும்புகிறார்.


ஆளுநருக்கான அரசியலமைப்பு சார்ந்த கடமைகளை மறந்து விட்டு, ஆர்எஸ்எஸ் அமைப்பின் சேவகராகவே செயல்பட்டு வரும் ஆர்.என்.ரவியின் விஷமத்தனமான பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# பி.டி.ரணதிவே

## நான்காவது பொதுச்செயலாளர்

# இடதுசாரி சாகசத் தலைவர்

**பிடிஆர் என பிரபலமாக அறியப்பட்ட பால்சந்திர திரிம்பக் ரணதிவே, டிசம்பர் 19, 11904 இல் மும்பையின் தாதரில் பிறந்தார். அறிவிற்சிறந்த மாணவர். 1928ல் முதனிலை மாணவராக முதுகலைப் பட்டம் பெற்றார்.**



பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு தலைமறைவாக இயங்கி வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 1928ல் சேர்ந்தார். அதே ஆண்டில் அவர் பம்பாயில் ஏஐடியூசியுடன் இணைக்கப்பட்ட, புகழ்மிக்க பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தில் (கிரினி கம்கர் யூனியன்) பணியாற்றத் துவங்கினார். ரயில்வே தொழிலாளர்களின் போராட்டங்களில் கணிசமாக பங்களிப்பு செய்தார். ஆசியாவிலேயே முதல் தடவையாக 1853ல் தொடங்கப்பட்ட ஜிஐபி ரயில்வே (கிரேட் இந்தியன் பென்னிசுலா ரயில்வே) தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளரானார். 1939 ஆம் ஆண்டு, தொழிற்சங்க ஆர்வலரான விமலை மணந்தார்.

கட்சி இரண்டாம் முறையாக தடை செய்யப்பட்ட போது, கைது செய்யப்பட்டு 1940 42 ஆண்டுகளில் தியோலி சிறையில் வைக்கப்பட்டிருந்தார். 1943ல் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் இறுதி நிகழ்வான புகழ்மிக்க கப்பற்படை எழுச்சியின் போது உடனிருந்து உதவிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் இவரும் ஒருவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது மாநாடு கல்கத்தாவில் 1948ல் நடந்த போது கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். அதுவரை பொதுச் செயலாளர் இருந்து, கட்சியை நாடு தழுவிய அமைப்பாக கட்டியமைத்த பி.சி. ஜோஷி, இந்த மாநாட்டில் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டது ஒரு துன்பியல் நிகழ்வு.

கப்பற்படை எழுச்சியின் தொடர்ச்சியாக, இந்தியப் பரப்பு 565 நாடுகளாக விடுதலை அடைந்தது. அதனை இந்தியா என்ற நாடாக ஒன்றிணைக்கவும், தாம் வாழ்ந்த நிலப்பரப்பை ஆட்சி செய்ய முயன்ற குறுநில மன்னர்கள், நிஜாம்கள், திவான்கள், ராஜாக்களிடமிருந்து விடுவிக்கப்படவும் சமஸ்தான மக்கள் போராடினர்.

தெலுங்கானாவில் ஆயுதம் தாங்கிய புரட்சி மூலம் கட்சி 4000க்கு மேற்பட்ட கிராமங்களை நிஜாமின் ரஜாக்கர்களிடமிருந்து விடுவித்தது.

அதே போன்றதொரு ஆயுதக் கிளர்ச்சியை நாடு முழுமையும் உருவாக்கி வெற்றி பெறமுடியும் என்று நினைத்த தோழர்களுக்கு தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை மூன்றாவது முறையாக தடை செய்யப்பட்டது. பிரிட்டிஷ் காலத்தை விட கொடூரமான முறையில், விடுதலை பெற்ற இந்தியாவின் அரசு கம்யூனிஸ்டுகளை சித்திரவதை செய்தது.

1950 ஆம் ஆண்டு ரணதிவே பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு, கட்சியால் “இடது சாகசக்காரர்” என்று கண்டிக்கப்பட்டார்.

இடது சாகசத்தை முன்னெடுத்தவர்களுக்கு ஆசிரியராக இருந்த போதிலும், 1956 ஆம் ஆண்டு, பாலக்காட்டில் நடந்த 4வது கட்சி மாநாட்டில், பி.டி.ஆர் மீண்டும் மத்திய குழுவில் சேர்க்கப்பட்டார்.

1964ல் கட்சியில் பிளவு ஏற்படுத்தி வெளியேறியவர்களில் அவரும் ஒருவர். ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் தலைமையை கைப்பற்றுவதற்கு மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ந்து முயற்சி செய்தும், அது இயலாமல் போனதால் 1970 இல் ஏஐடியுசியை உடைத்து சிஐடியு சங்கத்தை உருவாக்கியது.

கல்கத்தாவில் மே 2831, 1970 அன்று நடைபெற்ற சிஐடியு மாநாட்டில், ரணதிவே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் சிபிஐஎம் தலைவரான அகல்யா ரங்னேகரின் மூத்த சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 6, 1990ல் இறந்தார்.

– டி.எம்.மூர்த்தி

## மொழி ஆதிக்கம் பற்றி ஜீவா

மூன்று கோடி தமிழ் மக்களும் எத்தகைய பேதமும் பாராட்டாது, கல்லூரிகளில் விஞ்ஞானத் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும், தமிழ்நாட்டில், தமிழ் மக்களின் சகல துறைகளிலும், தமிழே ஆட்சி செலுத்தத் தகுந்த சிறந்த சூழ்நிலையை ஒன்றுபட்டு உருவாக்குவதே, அவசர அவசியக் கடமையாகும். இதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் பணிவான வேண்டுகோள்.



இந்தச் சூழ்நிலை உருவாகிவிடுமானால், இதற்காக மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்காரும் தமிழின் தங்குதடையற்ற வளர்ச்சிக்குப் பண உதவியும், இதர உதவிகளும் செய்ய முன்வந்து மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையும் பெற்று விடுவார்களானால், இன்றைய ஆங்கில ஆதிக்கத்தின் இடத்தில், இந்தியின் ஆதிக்கம் ஏற்படும் என்ற பயத்துக்கு இடமிராது என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தியும், ஆங்கிலமும், நாட்டிலும் சரி தமிழகத்திலும் சரி, நியாயமாக எந்தெந்த இடங்களில் இருக்க வேண்டுமோ, அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும்.

**(திருச்சியில் 1957 டிசம்பர் கடைசி வாரத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரதிநிதிகளின் விசேஷ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி, தோழர் ஜீவா பொதுக்கூட்டத்தில் பேசியது).**

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்

கோயம்புத்தூர் & பெரியார் டிஸ்ட்ரிக்ட் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின்

பொதுச் செயலாளர் திரு. சு.துரைசாமி Ex MLA அவர்களின்

65 ஆண்டுக் கால தொழிற்சங்கப் பணிகளை கவுரவித்து



கோவை மாவட்ட பஞ்சாலை தொழிற்சங்கங்கள் நடத்தும் பாராட்டு விழா

நாள் : 16.03.2025 | ஞாயிறு காலை 10.00 மணி | இடம் : மணி மஹால், காமராசர் சாலை, ஹோப் காலேஜ், கோயம்புத்தூர்

நிகழ்ச்சி நிரல்

துவக்கவுரை : மு.தியாகராசன் தலைவர், கோயம்புத்தூர் & பெரியார் டிஸ்ட்ரிக்ட் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்.

முன்னிலை : A.பழனிசாமி, ப.கோவிந்தசாமி, V.சீனிவாசன்
கோயம்புத்தூர் & பெரியார் டிஸ்ட்ரிக்ட் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்.

தலைமை : M.ஆறுமுகம் Ex MLA, பொதுச் செயலாளர், கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட் மில் ஒர்க்கர்ஸ் யூனியன்.

வரவேற்புரை : T.S. இராஜாமணி, தலைவர் கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்

வாழ்த்துரை : திரு. Dr. B.K.கிருஷ்ணராஜ் வாணவராயர் கல்வியாளர்
திரு. N.V. நாகசுப்பிரமணியன் மூத்த வழக்கறிஞர்
திரு. P. மாரிமுத்து கூடுதல் தொழிலாளர் ஆணையர் [ஓய்வு]

பாராட்டுரை : C.பத்மநாபன் பொதுச் செயலாளர், CITU,
கோவை செல்வன் தலைவர், INTUC,
G.மனோகரன் செயலாளர், HMS,
C.சிவசாமி செயலாளர், AITUC,
M.கோபால் செயலாளர், ATP,
S.உதயகுமார் பொதுச் செயலாளர், டாக்டர் அம்பேத்கார் யூனியன்,
P. ரங்கசாமி தலைவர், NDLF

ஏற்புரை : சு.துரைசாமி Ex MLA

நன்றியுரை: V.R.பாலசுந்தரம், துணைப் பொதுச் செயலாளர், INTUC

கோவை மாவட்ட பஞ்சாலைத் தொழிற்சங்கங்கள்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்
ஜனசக்தி
மலர் 87 இதழ் 49

# எங்கு இல்லை நாங்கள், சீமானே!

பொய்க்கதைகளைப் பேசி புளுத்துப் போன வாய் திறந்து சீமான் என்பவர் கேட்டிருக்கிறார் 'எங்கிருக்கிறது கம்யூனிஸ்ட்' என்று.

பூட்டிய அறைகளுக்குள்ளும், பொலிவான மாளிகைகளுக்குள்ளும், பவுன்சர்கள் புடைசூழ ஏசி கார்களுக்குள்ளும், அவர் தேடினால் கம்யூனிஸ்டுகள் கிடைக்க மாட்டார்கள் தான்!

'அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், செவிலியர்கள் போராடிய போது கம்யூனிஸ்டுகள் எங்கே போனார்கள்?' என்று கொக்கரித்து கேட்கிறார்.

போராட்டங்களுக்கும், இந்த மனிதருக்கும் என்ன தொடர்பு? வேடிக்கை பார்க்க போயிருந்தால் கூட விவரம் தெரிந்திருக்கும். மேடை ஏறி நின்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக்கொண்டிருப்பவருக்கு என்ன புரியும்?

போராட்டங்கள் இவருக்கு பத்திரிகைகளில் படிக்கிற செய்தி! ஆனால் கம்யூனிஸ்டுகளுக்கோ போராட்டமே வாழ்க்கை. எந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் இல்லாமல் போய்விட்டார்கள்? கம்யூனிஸ்டுகள் ஒருங்கிணைக்காமல், வழிநடத்தாமல், உதவிக்கு நிற்காமல் இந்த நாட்டில் பெருவாரியான போராட்டங்களும் நடைபெற்றதில்லை.

சம வேலைக்கு சம ஊதியம் என்றால் என்ன? என்பதைப் பற்றியோ, குறைந்தபட்ச ஊதியம் குறித்தோ, அவற்றுக்காக பல்வேறு துறைகளில் கம்யூனிஸ்டுகள் நடத்திய, நடத்திக் கொண்டிருக்கிற போராட்டங்களைப் பற்றியோ சீமானுக்கு என்ன தெரியும்?

'நான் ஆட்சிக்கு வந்தவுடன், வடக்கிலிருந்து வந்த தொழிலாளி மீதெல்லாம், கஞ்சா கேஸ் போடுவேன், கள்ளச்சாராய கேஸ் போடுவேன், சிக்கின கேஸை எல்லாம் அவனுக மேல போடுவேன். தானா ஓடிப் போவான்' என்று பகிரங்கமாக இவர் மார்தட்டிக் கொண்டதை மறக்க முடியாது.

தமிழுக்கு கம்யூனிஸ்டுகள் செய்த பங்களிப்பு என்னவென்று தற்குறிகளுக்கு தெரியாமல் போகலாம். சட்டப்பேரவையில் முதலில் தமிழில் பேசியவர்கள் ஜீவாவும், பி.ராமமூர்த்தியும். மெட்ராஸ் ஸ்டேட் என்பதை மாற்றி தமிழ்நாடு என பெயர் சூட்ட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாக வாதிட்டவர் தமிழராகப் பிறக்காத புபேஷ் குப்தா. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு தொழிலாளர்கள் சங்கம் என்று 1940 களிலேயே முதலில் பெயர் சூட்டிக்கொண்டவர்கள் கம்யூனிஸ்டுகள். தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த சங்கரலிங்கனார் தனது உடலை கம்யூனிஸ்டுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தான் எழுதி வைத்தார்.

தமிழில் கதை, கவிதை, புதினம், திறனாய்வு துறைகளில் எல்லாம் புதிய பரிமாணத்தைத் தந்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர், வேளாண் அமைச்சர்களாக, பல்வேறு மாநிலங்களில் முதலமைச்சராக அமைச்சர்களாக, எம்பிகளாக எம்எல்ஏக்களாகப் பணி புரிந்திருக்கிறார்கள்.

ஊழல் செய்தார்கள், சொத்து சேர்த்தார்கள், வசதி மிக்க வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று ஒருவரையாவது சொல்ல முடியுமா? பழைய காலத்தை கூட விடுவோம் தற்போது எம்எல்ஏ ஆகி 4 ஆண்டுகளாகியும் குடிசை வீட்டில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறாரே திருத்துறைப்பூண்டி எம்எல்ஏ மாரிமுத்து, தோழர் நல்லகண்ணுவின் நூற்றாண்டைக் கட்சி கொண்டாடவில்லை என்று அங்கலாய்த்துக் கொள்கிறது ஞான சூனியம்.

மரியாதை செலுத்துகிறேன் என்று நல்லகண்ணு வீட்டில் போய் பார்த்துவிட்டு, அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு 10 கேமராக்கள் முன்பு அளந்து விட்டுக் கொண்டிருந்தார். நல்லகண்ணு சொல்லித்தான் நான் அதைப் பேசினேன் என்று நாளை கதை விடலாம்.

பேசி முடிந்ததும், பத்திரிக்கையாளர்களை கையசைத்து அழைத்த, நூறு வயதாகும் தோழர் நல்லகண்ணு, "இங்கே இவர் பேசியதற்கும் எனக்கும் என் கட்சியும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்று சொன்னார். சொல்லா அது, கழற்றி அடித்த அடி!

தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக, ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்டுகள் மக்கள் பிரச்சனைக்காக தினம்தோறும் களத்தில் நிற்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் சீமானை போல் கேமராக்களை எடுத்துச் சென்று படப்பிடிப்பு நடத்துவதில்லை.

மூலதனத்தின் கோரப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக உழைப்பவர்கள் போராடுகிற செய்திகளை மக்கள் கவனத்துக்கு செல்லாமல் தடுப்பதற்காக, சமூகத்துக்கு பத்து பைசாவுக்கு பயனில்லாத, சீமானின் பஞ்ச் டயலாக்குகளை, வெற்று வாய்ச் சவடால்களை முதலாளித்துவ ஊடகங்கள் பரபரப்பாக்குகின்றன.

கிராமங்களில், கழுதையின் வாலில் காய்ந்த பனை ஓலையைக் கட்டி விடுவார்கள் குறும்புக்காரர்கள். அது தன் காலில் ஏதோ உரசுவதை உணர்ந்து, சரசரக்கும் ஓசையைக் கேட்டு, தன் பின்னால் பெரும் கூட்டம் வருவதாக கருதிக் கொண்டு "காள், காள்" என கத்திக்கொண்டு, குதித்துக் குதித்து ஓடும்.

ஓடுமட்டும் ஓடு!!

# தேசிய அளவிலான மக்கள் தொண்டர் படை




மக்கள் தொண்டர் படையின் தேசிய அளவிலான கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளரும், துறை செயலாளருமான டாக்டர் கே. நாராயணா தலைமை தாங்கினார். இந்தக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கலந்து கொண்டு, இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சண்டிகரில் நடைபெறவிருக்கும் கட்சி மாநாட்டின் முக்கியத்துவம் மற்றும் தெலுங்கானா மாநிலத்தின் கம்மத்தில் நடைபெறும் நூற்றாண்டு விழா குறித்து விளக்கினார்.

டாக்டர் கே.நாராயணா, மக்கள் தொண்டர் படையின் செயல்பாடுகள் குறித்த அறிக்கையை அளிக்கும்போது, எட்டு மாநிலங்களில் ஏற்கெனவே பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டதாகக் கூறினார். அவற்றில் கேரள மாநிலத்தில் ஆயிரக்கணக்கான ஆர்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது, அதேபோல் தமிழ்நாட்டிலும் கூட ஏற்பாடுகள் முழு வீச்சில் உள்ளன.

கர்நாடகக் கட்சி பிரதிநிதி ஒரு புதிய திட்டத்தை வழங்கியுள்ளார். அதாவது, ஒவ்வொரு கட்சிக் கிளையும் 100 கொடி கம்பங்களை அமைத்து நூறு மரங்களை நட வேண்டும். இந்த திட்டத்தை உத்வேகமாக எடுத்துக்கொள்ளலாம் என்று கூட்டம் கருதியது.

புதிய சூழ்நிலைக்கு ஏற்ப சில திருத்தங்களுடன் சி.ராஜேஸ்வர ராவ் எழுதிய மக்கள் தொண்டர் படை குறித்த புத்தகத்தை மீண்டும் வெளியிட கூட்டம் முடிவு செய்தது. மண்டல அளவில் இருந்து தேசிய அளவில் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். இளம் பெண்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

தரமான எண்ணிக்கை என்ற பெயரில் புறக்கணிக்கப்படக்கூடாது. அளவு மற்றும் தரம் இரண்டும் சமநிலையில் இருக்க வேண்டும்.

சீருடைகளுக்கு தனி நிதி திரட்டப்பட வேண்டும்.

மக்கள் தொண்டர் படைக்கான தோழர்களை தேர்ந்தெடுக்கும்போது ஒழுக்கம் மற்றும் தியாகத்தின் தன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஏதேனும் இயற்கை பேரிடர் ஏற்பட்டால் அவர்கள் மறுவாழ்வுத் திட்டங்களில் குதிக்க முடியும்.


கட்சியின் உதவிச் செயலாளர் அல்லது மாநிலச் செயற்குழு உறுப்பினர் மக்கள் தொண்டர் படையின் பொறுப்பாளராக இருக்க வேண்டும், மேலும் அவர் நூற்றாண்டு விழா முடியும் வரை முழுநேரமும் கவனம் செலுத்த வேண்டும்.

## கே.உலகநாதன் இல்ல திருமணவிழாவில்
# கட்சி வளர்ச்சி நிதி ரூ.10,000

திருத்துறைப்பூண்டியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கே.உலகநாதன், ஆசிரியர் பி.சுசிலா தம்பதியரின் மகள் உ.அபித்ராவுக்கும், திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் ஆர்.சதாசிவம், பாத்திமா மேரி தம்பதியரின் மகன் ஆர்.எஸ்.சசிதரன் ஆகியோர் திருமண வரவேற்பு விழா திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. இவ்விழாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். அப்போது மணமக்கள் சார்பில் ரூபாய் 10 ஆயிரம் கட்சி வளர்ச்சி நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சி மாநிலக் கட்டுப்பாட்டு குழு செயலாளர் கோ.பழனிசாமி, தேசியக் குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் முன்னாள் எம்எல்ஏ, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, மாநிலச் செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி முன்னாள் எம்எல்ஏ, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.வையாபுரி, கட்சியின் மாவட்டப் பொறுப்புச் செயலாளர் எஸ்.கேசவராஜ், மாவட்டப் பொருளாளர் கே.தவ பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## பதில் சொல்லுங்கள் அண்ணாமலை!



"தொகுதி மறு வரையறுப்பின் பிறகு, மக்கள் தொகை விகிதாச்சாரப்படி நாடாளுமன்றத் தொகுதி இருக்கும். ஆனால், தமிழ்நாட்டுக்கு தொகுதி குறையாது. முதல்வர் பொய் சொல்கிறார்" என்று பேசும் அண்ணாமலைக்கு ஒரு கேள்வி!

இப்போதுள்ள 543 தொகுதிகளில், தமிழ்நாட்டுக்கு 39 தொகுதி இருக்கிறது. கிட்டத்தட்ட 7.2%.

மொத்த நாடாளுமன்ற மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு உயர்ந்தாலும், அதில் தமிழ்நாட்டுக்கு இப்போதுள்ள 7.2% தொகுதிகள் இருக்குமா?

ஆம் அல்லது இல்லை என்று ஒரே வார்த்தையில் அண்ணாமலை வகையறா பதில் சொல்ல வேண்டும்.

டி.எம்.மூர்த்தி

## இசைஞானி இளையராஜாவுடன் தோழர் இரா.முத்தரசன் சந்திப்பு



இசைஞானி இளையராஜாவை அவரது அலுவலகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் சந்தித்து அவரது இசைப் பயணம் உலக அளவில் வெற்றியடைய வாழ்த்துகள் தெரிவித்தார். மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



த.லெனின்

# பாஜகவின் சகுனி வேலை! தொகுதி மறுவரையறை!

**சமீபத்தில் கோயம்புத்தூரில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொகுதி மறுசீரமைப்பு குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் தெளிவாகக் கூறியுள்ளார்.**



தொகுதி மறுசீரமைப்பு விகிதாச்சார அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும் தென்னிந்திய மாநிலங்கள் உள்பட நாட்டில் எந்த மாநிலத்துக்கும்பாதிப்புஏற்படாது என உறுதியளித்துள்ளார். திமுக முதல்வர் ஸ்டாலின் தவறான தகவல்களைத் தெரிவித்து மக்களுக்குத் துரோகம் செய்து வருகிறார் என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும்போது Pro-rata எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விகிதாச்சார உயர்வு இப்போதுள்ள தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டதா? அல்லது இப்போதுள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டதா? என்பதற்கு எந்தவித விளக்கமும் கொடுக்கப்படவில்லை. இந்த அறிவிப்பு மிகுந்த குழப்பமாக இருக்கிறது. தமிழ்நாட்டின் தொகுதிகளைக் குறைக்காமல், வட மாநிலங்களுக்கு அதிகமாகக் கொடுத்தாலும் அது தமிழ்நாட்டிற்கு அநீதிதான்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தச் சொன்னது மத்திய அரசு. அதனால் கட்டுப்படுத்தியது தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள். கட்டுப்படுத்த தவறிய வட மாநிலங்கள் உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் போன்றவற்றிற்குப் பரிசும் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்குத் தண்டனையும் அளிப்பதா? துரோகம் செய்வது யார்? இது எந்த வகையான நீதி? மனுநீதியின் மறு அரசியல் வடிவம் தானே இது!

ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகும், மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்ய இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 82 வலியுறுத்துகிறது. இப்படி மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்காக 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொகுதிச் சீரமைப்பு ஆணையம் அல்லது எல்லை நிர்ணய ஆணையச் சட்டத்தின் விதிகளின் (Delimitaion Commission) மூலமே, தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டு வருகின்றன.

## இதுவரை நடந்துள்ள தொகுதி மறு வரையறை

இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது 489 தொகுதிகள்தான் இருந்தன. 1952இல் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டபோது, மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கை 494 ஆக உயர்ந்தது. அப்போது மக்கள் தொகை 36.1 கோடியாக இருந்தது.

இதற்குப்பிறகு, இரண்டாவது முறையாக 1963 இல் தொகுதிகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு, தொகுதிகளின் எண்ணிக்கை 522ஆக உயர்த்தப்பட்டது. அந்தத் தருணத்தில் மக்கள் தொகை 43.9 கோடியாக உயர்ந்திருந்தது. பிறகு 1973 இல் மூன்றாவது முறையாக மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 543 ஆக உயர்த்தப்பட்டது. அப்போது மக்கள் தொகை எண்ணிக்கை, 54.8 கோடி.

## ஒத்திவைக்கப்பட்ட தொகுதி மறு சீரமைப்பு

இதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு மாநிலத்திலும் திருத்தப்பட்டது. இந்நிலையில், 1975 இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது. அப்போது மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டதால், அந்தத் தருணத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 42 வது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதன்படி, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுவருவதால், தொகுதி மறுசீரமைப்பை அடுத்த 25 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளக்கூடாது என இந்தத் திருத்தம் கூறியது.

ஏனென்றால், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை ஒழுங்காகச் செயல்படுத்திய மாநிலங்கள் இதனால் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

கடந்த 2001 இல் இந்த 25 ஆண்டு கால வரையறை முடிவுக்கு வந்தது. இதனால் 2002 இல் அடல் பிஹாரி வாஜ்பேயி பிரதமராக இருந்தபோது தொகுதி மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனால், 84வது திருத்தத்தின் மூலம் இது அதே காரணங்களுக்காக மேலும் 25 ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டது. மோடி ஆட்சியிலும் இப்போது தள்ளி வைத்து விட வேண்டியது தானே? ஏன் அதைச் செய்ய மறுக்கிறார்கள்?

கடந்த 2000 வது ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய மக்கள் தொகைக் கொள்கையின்படி, 2026 க்குள் இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் மக்கள் தொகை நிலைபெற்றுவிடும் எனக் கூறப்பட்டது. ஆகவேதான், அந்த ஆண்டுக்குப்பிறகு, தொகுதி மறுசீரமைப்புச் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 2026 க்குப் பிறகு நடக்கும் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து, தொகுதிகளை மறுவரையறை செய்ய வேண்டும். ஆனால், மக்கள் தொகை நிலைபெற்று விட்டதா என்றால் இல்லை? பின்பு எப்படி மறுசீரமைப்புச் செய்வது?

மக்கள் தொகை கணக்கெடுப்பு வழக்கம்போல நடந்திருந்தால், 2026 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2031ஆம் ஆண்டில்தான் நடந்திருக்கும். ஆனால், 2021ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படாததால், அந்தக் கணக்கெடுப்பை 2026 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தி, அதன் அடிப்படையில் அடுத்த சில ஆண்டுகளிலேயே தொகுதிகளை மறுவரையறை செய்து அடுத்த பொதுத் தேர்தலையும் எதிர்கொள்ளலாம் என்ற சிந்தனை பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ்ஸுக்கு உள்ளது. இதனால்தான் இந்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

## ஐந்து மாநிலங்களின் மக்கள் தொகை வளர்ச்சி!

இந்தியாவில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பான 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, பிகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் மட்டும் சேர்ந்து இந்திய மக்கள் தொகையில் பாதிப் பேரை, அதாவது 48.6 சதவீதம் பேரைக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, மக்கள் தொகை அடிப்படையில் இடங்களை அதிகரித்தால், இந்த ஐந்து மாநிலங்களிலேயே இந்தியாவின் பாதி மக்களவை இடங்கள் இடம்பெறும்.

இந்நிலையில்தான் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகளை அதிகரித்தாலோ, குறைத்தாலோ தென் மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டன. அந்த மொழிவாரி மாநிலங்கள் சரியான வகையில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு பண்பாட்டுச் சிறப்புக் கூறுகள் இருக்கின்றன. அவர்களுக்கு உரிய சமமான பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அமெரிக்க மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சமமான அளவு வாக்கு மதிப்பு இந்தியாவிற்கும் பொருத்தமானதுதான். அதன் மூலம்தான் வேற்றுமையில் ஒற்றுமை காணும் நமது பன்மைத்துவப் பண்பாட்டுக் கூறுகளைப் பாதுகாக்க முடியும்.

அரசமைப்புப் பிரிவு 81ல் 2வது விதியில் மக்கள் தொகை அடிப்படையில் உறுப்பினர் எண்ணிக்கை இடையிலான விகிதம் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால், அதில் விதிவிலக்காக வடகிழக்கில் பழங்குடி இன மக்கள் அதிகம் வாழும் மாநிலங்களில் 60 லட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்டவைகளுக்கு இது பொருந்தாது என்று கூறப்பட்டுள்ளது. இது மிகச் சரியானதே. இதனை அனைத்து மொழி வழி மாநிலங்களுக்கும் அளித்து விடுவது தான் இப்போது பொருத்தமானது.

## இந்திப் பெரும்பான்மை வாத ஆபத்து!

ஒரே ஒரு மொழி மட்டும் ஆதிக்கம் செலுத்தும் வகையில் நாடாளுமன்றம் உருவானால், இந்தியா பல்வேறு மொழி, கலாசாரங்களை உள்ளடக்கிய ஒருதுணைக் கண்டமாக இருக்காது. உடைந்து சின்னா பின்னமாகிவிடும் இதைத்தான் ஒன்றிய பாசிச ஆட்சியாளர்கள் விரும்புகிறார்களா?

எனவே, எல்லா மாநிலங்களிலும் மக்கள் தொகை நிலைபெறும் வரை, தொகுதி எண்ணிக்கையை அதிகரிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும்.

பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்றால் இப்போது இருக்கும் அதே விகிதாச்சாரத்தில் பெண்களுக்கு என 33 சதவீத இட ஒதுக்கீட்டை அளித்துத் தொகுதிகளையும் உயர்த்தலாம். ஆனால், அதைச் சாக்கிட்டு மக்கள் தொகை அடிப்படையில் என்று முடிவெடுத்தால் நாட்டின் ஒற்றுமை உருகுலைந்து போகும்!

வெள்ளைக்காரர்களின் விருப்பத்தை அதாவது நாடு பிரிவினைவாத நோயில் தள்ளப்பட்டு அழிய வேண்டும் என்பதை இவர்கள் நிறைவேற்றி முடிப்பார்கள்!

தொடர்புக்கு : 9444481703

### பெரும்பான்மை வாதத்திற்கு ஆதரவு

ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாஜகவும் எப்போதும் மதப் பெரும்பான்மை வாதத்திற்கும், மொழிப் பெரும்பான்மை வாதத்திற்கும் ஆதரவளித்து வந்திருக்கின்றன.

தேர்தல் வெற்றிக்காக நாட்டையே குட்டிச்சுவராக்கும் எல்லாக் காரியங்களையும் துணிந்து செய்வார்கள் ஒரு காலத்தில் இஸ்லாமியர்கள் மக்கள் தொகையில் அதிகரித்து வருகிறார்கள். இப்படியே விட்டால் 2050 இந்தியாவில் இஸ்லாமியர்கள் அதிகரித்து பெரும்பான்மை பெற்று விடுவார்கள் என்ற அச்ச உணர்வைக் கூச்சநாச்சமின்றி வாந்தி எடுத்தனர்.

உண்மையில் இப்போது அதையே அடிப்படையாகக் கொண்டு கவனத்தில் எடுத்தால் இந்தி பேசும் மாநிலங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாதது தெரியவரும். தென் மாநில இந்துப் பெண்களை விட வட மாநில இந்துப் பெண்களின் கருத்தரிப்பு விகிதம் அதிகமாக இருந்து வருகிறது. அப்படியெனில் நாளடைவில் இது இந்திப் பெரும்பான்மைவாத ஆதிக்கத்திற்கு உடந்தையாகி விடாதா? இந்த மாநிலங்களின் வளர்ச்சிக்குத்தான் வளர்ந்த தென் மாநிலங்களில் வசூலிக்கப்படும் வரிகள் அனைத்தும் நிதியாகக் கொட்டப்படுகின்றன. இருந்தும் கல்வி வளர்ச்சியும் இல்லை மக்கள் தொகை கட்டுப்படுத்துதலும் இல்லை!

# கண்ணிய வாழ்க்கை கருணையல்ல அது பெண்களின் உரிமை



கலை.அஸ்வினி

**“கண்ணியத்துடன் கூடிய வாழ்க்கை கருணை அல்ல. அது பெண்கள் உரிமை, அதை உறுதிப்படுத்து” எனும் முழக்கத்தோடு உலகின் அனைத்து பெண்களுக்கும் புரட்சிகர வாழ்த்துகளை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக்குழு தெரி வித்துக் கொள்கிறது.**

2025 ஆண்டிலும் உலக அளவில் பெண்கள் சந்தித்து வரும் சவால்கள் குறித்துப் பேச வேண்டிய நிர்பந்தத்திற்கும் உள்ளாகி இருக்கிறோம்.

## சர்வதேச மகளிர் தினம்

மகளிர் தினம் எப்படி உருவானது என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

1810 ஆம் ஆண்டில் கோபன் ஹேகனில் கிளாரா ஜெட்கின் தலைமையில் நடைபெற்ற உலக பெண்கள் மாநாட்டில் 18 நாடுகளிலிருந்து 100 பெண்கள் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில்தான் மார்ச் 8 ஆம் தேதியை சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நீண்ட போராட்டத்திற்கு பின்னர் தான் மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது 1975ல் ஐ.நா சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

### இந்தியப் பெண்கள் இயக்கம்

இந்தியப் பெண்கள் இயக்கத்தில் சோசலிச சிந்தனையும் செயல்பாடும் மேலோங்கி இருந்தாலும், அதனை மகளிர் அடைவதற்கு தொடர்ச்சியாக போராட்டங்களும் முன்னோடி பெண்தோழர்களின் அர்ப்பணிப்பும் இன்றியமையாதது. சமூக உறவுகளுக்கும் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் இடையிலான இயங்கியல் ரீதியான தொடர்புகளை இயக்க தோழர்கள் அடையாளம் காண வேண்டும்.உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, உற்பத்திக் கருவிகளின் மீதான கட்டுப்பாடு, ஆண், பெண் மற்றும் குடும்ப நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கி பயணிக்கிற பெண்களைப் பற்றிய இந்த சமூகத்தின் பார்வை மிக குறுகலானது.

எதிர்காலத்தில் நம்மை எவ்வித திசைவழி நோக்கி நகர்த்திக் கொள்ள வேண்டும் என கூர்ந்த பார்வையும் தெளிவும் கொண்டவர்களாக பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

குழந்தை திருமணம் தொடங்கி பெண் சிசுக் கொலை, உடன்கட்டை ஏறுதல், உழைப்புச் சுரண்டல், அதிகாரம் மறுத்தல், சுய மரியாதை இழத்தல், சொத்துக்கான அங்கீகாரம் மறுத்தல், ஆண் இனத்தவருக்கு கீழாக நடத்தப்படுதல் போன்ற பலதரப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு உள்ளானவர்களாக பெண் சமூகம் நடத்தப்பட்ட தன் விளைவாக மேலை நாடுகளின் போராட்டங்கள், பெண்ணிய இயக்கங்கள் மூலம் வெகுவாக இந்திய மக்கள் ஈர்க்கப்பட்டனர்.

1857 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனித்துவத்திற்கு எதிரான இந்தியாவின் முதல் சுதந்திரப் போரில், ராணி லட்சுமிபாய் மற்றும் பேகம் ஹஸ்ரத் மஹால் போன்ற ராணிகள் மட்டுமல்ல, ஜல்காரி பாய் போன்ற தலித் பெண்களும், அசிசான் பாய் போன்றோரும் சுதந்திரப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு போராளிகளாகவும் தலைவர்களாகவும் பரிணமித்தனர்.

இந்தப் போராளிகள் அனைவரும் பெண்களைக் கட்டிப்போட்ட பல நிலப்பிரபுத்துவக் கட்டுப்பாடுகளுக்கு சவாலாகவே அமைந்தனர்.

19 ஆம் நூற்றாண்டில் பல சமூக சீர்திருத்தவாதிகளும், சாதாரண பெண்களும் சதி மற்றும் குழந்தை திருமணத்திற்கு எதிராக போராடினார்கள். மேலும் விதவை மறுமணம் மற்றும் பெண் கல்விக்காக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

ரக்மாபாய் எனும் போராளி 13 வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டார். ஆனால், அவர் வயது வந்தவுடன் இந்த குழந்தை திருமணத்தை மதிக்க விருப்பமில்லாதவராய் எதிர்த்து அவர் சமூக சீர்திருத்தவாதிகளின் அணிவகுப்பில் முதன்மையான போராளியாக மாறினார்.

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களில்ஒருவராக ஆனார். 1880களில் கொல்கத்தாவின் கடம்பினி கங்கோபாத்யாயா மருத்துவராகவும் இங்கிலாந்தில் கூடுதல்பட்டம்பெறவும்மிகப்பெரிய ஆணாதிக்க எதிர்ப்பைக் கடக்க வேண்டியிருந்தது. ஒடுக்கப்பட்ட இன எழுத்தாளரும் ஆர்வலருமான சாவித்ரிபாய் புலே, தன்னைத் துன்புறுத்தி, துஷ்பிரயோகம் செய்து, அவதூறுகளை வீசும் நிலப்பிரபுத்துவ, சனாதன சக்திகளை எதிர்த்துப் பெண் கல்விக்கு முன்னோடியாக இருந்தார்.



உயர்சாதி இந்து விதவைகள் அனுபவித்த அருவருப்பான மற்றும் பாரபட்சமான சமூக பழக்கவழக்கங்களை சாவித்ரிபாய் தனது கணவர் ஜோதிபா பூலேவுடன் சேர்ந்து போராடினார்.

மருத்துவராகத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண்களில் ஆனந்திபாய் ஜோஷியும், மகாராஷ்டிராவின் ஆரம்பகால பெண் நாவலாசிரியர் காஷிபாய் கனித்கரும் முதன்முதலில் காலணிகள் அணிந்தும், குடைகளை ஏந்தியும் பொதுவில் இறங்கியபோது, தெருக்களில் கல்லெறியப்பட்டதன் மூலம் ஆகப்பெரும் புரட்சியை தூண்டினார்கள்.

1882 இல் ‘ஸ்த்ரீ புருஷ் துலானா’ என்ற மராத்திய துண்டு பிரசுரத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான சமத்துவமின்மையை எதிர்த்து எழுதியபோது,சில சமூக சீர்திருத்தவாதிகள் கூட அவரைத் தாக்கினர். தலித் சமூக சீர்திருத்தவாதி ஜோதிபா பூலே மட்டுமே அந்தப் படைப்பைப் பாதுகாத்தார். 1890 களில், பிரம்ம சமாஜப் பெண்கள் குழுக்கள் கொல்கத்தாவின் தெருக்களில் பர்தாவுக்கு எதிராக ஒரு பொதுப் பிரச்சாரத்தை நடத்தினர்.

சுதந்திரப் போராட்டங்களில், 1928 29 பொது வேலைநிறுத்தத்தின் போது கம்யூனிஸ்ட் தலைமையிலான தொழிற்சங்க இயக்கத்தில் இருந்த பெண்கள் பருத்தி ஜவுளி ஆலைகளின் வாயில்கள் முழுவதும் பெண்கள் மட்டுமே திரண்டு மறியலில் ஈடுபட்டனர்.

கல்பனா தத் ஒரு புரட்சியாளராகவும், இந்திய விடுதலை இயக்கத்தின் உறுப்பினராகவும் இருந்தார். 1930 ஆம் ஆண்டு சிட்டகாங் ஆயுதக் கிடங்கை தகர்க்கும் நடவடிக்கையில் அவர் தொடர்புடையவர், இது பிரிட்டிஷ் அதிகாரிகளிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் ஒரு துணிச்சலான முயற்சியாகும். சிறைவாசத்தை எதிர்கொண்ட போதிலும், அவர் சுதந்திரக் கொள்கையில் உறுதியாக இருந்தார்.

பிரித்திலதா வடேதர் ஒரு புரட்சியாளராகவும், இந்திய விடுதலை இயக்கத்தின் தீவிர உறுப்பினராகவும் இருந்தார். அவர் சிட்டகாங் ஆயுதக் கிடங்குத் தாக்குதலில் பங்கேற்று பின்னர் இனப் பாகுபாட்டை எதிர்த்து பஹர்தலி ஐரோப்பிய கிளப்பின் மீது தாக்குதலுக்கு தலைமை தாங்கினார்.

கிளாரா ஜெட்கின், ரோசா லக்சம்பர்க், குரூப்ஸ் கயா போன்ற தலைவர்களின் வரலாற்று பின்னணியில், இந்தியாவில் முன்னணி பாத்திரம் வகித்த தலைவர்கள் கல்பனா தத், அஸ்ரா பேகம், விமலா டாங்கே, விமலா பரூக்கி, பிரமிளா லூம்பா, தாரா ரெட்டி, ரேணு சக்கரவர்த்தி, கீதா முகர்ஜி, சரளா சர்மா, ரஞ்சனா ராய் கார்த்தி சக்கரவர்த்தி, பார்வதி கிருஷ்ணன், மீனாட்சி சுந்தரத்தம்மாள், சரஸ்வதி சுப்பையா போன்ற எண்ணற்ற தோழர்கள் வலுசேர்த்து போராட்ட வாழ்வை எப்படி எதிர்கொள்வதென வாழ்ந்து காட்டியுள்ளனர். அன்றைய காலகட்டத்தை காட்டிலும், போராட்டத்தின் தீவிர தன்மை குறைந்துள்ளதைசுயபரிசோதனை அடிப்படையில் ஒப்புக்கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் பலதரப்பட்ட சுதந்திரப் போக்குகள் பெண்களிடையே காணப்பட்டாலும் அவை வர்க்கப்பார்வையிலிருந்து வெகுவாக விலகியிருப்பதை மார்க்சிய கண்ணோட்டத்தோடு உணர முடியும்.

பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், பொதுவெளியில் பகிரங்கமாக பெண்களை இழிவாக பேசுதல், கூட்டுப் பாலியல் வன்புணர்வுகள் உட்பட குடும்ப வன்முறைகள் என நீளும் பட்டியல்.உலகின் எல்லா நெருக்கடிகளுக்கும், முதலாளித்துவம் கையில் எடுக்கும் ஆயுதம் பெண்கள். இருபாலருக்கும் பொதுவான வேலைகளில் கூட வேலை பங்கீடு செய்யும் ஆண்களை இழிவாக பேசும் போக்கு முதலில் பெண்களிடையே ஒழிக்கப்பட வேண்டும்.இது சமூக, குடும்ப பொறுப்புகளிலிருந்து ஒரு பாலினத்தவரை அந்நியப்படுத்தும் சம்பிரதாயம்.பெண்களுக்கான விழிப்புணர்வே இத்தகைய பிற்போக்குவாதங்களை மாற்றும்.

“குடும்பம் எப்போதும் சுற்றியிருக்கும் உணர்வு சுரண்டலுக்கான ஒரு வழியாகவே எப்போதும் பயன்படுத்தப்படுகிறது. பெண்களையும் குழந்தைகளும் சுரண்டுவதற்காகவே குடும்பத்தைப் பயன்படுத்துவது சோசலிசத்தின் கீழ்தான் முடிவுக்கு வரும்.” பெண்களின் அந்தஸ்து என்பது வழிவழியாகவே ஆண்களை விட தரம் குறைந்த ஒன்றாகவும், ஒரு சில நேரங்களில் உண்மையில் அடிமைத்தனமாகவுமே இருந்து வருகிறது. முழுமையான சுதந்திரம் “பாலின அடிப்படையில் அல்ல; வர்க்க அடிப்படையில்” கிடைக்கவேண்டும்.

வர்க்க அடிப்படையிலான சுதந்திரத்தை இலக்காகக் கொண்டு, போராடுவோம் வெற்றி பெறுவோம் !!புரட்சிகர வாழ்த்துகள்.

தொடர்புக்கு: 7538830251

## சீமானை உடனடியாகக் கைது செய்ய இந்திய மாதர் தேசிய சம்மேளம் வலியுறுத்தல்

நடிகை பலாத்காரம் தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆபாசமாகவும், இழிவாகவும் பேசி வருவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சீமானை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி வலியுறுத்தியுள்ளார்.

சீமானின் இந்த இழிவான பேட்டிகளுக்கு துணை நிற்கும் பெண்களுக்குத் தங்களையும் சேர்த்துதான் இழிவாகவும் கொச்சையாகவும் பேசிகிறார் என்பது தெரியாமல் இருப்பது வருத்தமளிக்கிறது. சீமான் பொதுவெளியில், எல்லை கடந்து அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமாகவும், கீழ்த்தரமாகவும் பேசுகிறார்.



இவர் ஒரு அரசியல் கட்சியின் தலைவராக இருப்பது வெட்கக்கேடானது. தமிழ்நாட்டிற்கே தலைகுனிவு. பாதிக்கப்பட்ட பெண்ணை அவமதிப்பது மட்டுமல்லாமல், பெண் இனத்தையே சீமான் அவமதிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பொது வெளியில் நாகரிகமற்ற முறையில் நடந்து கொள்வதோடு, பாதிக்கப்பட்ட பெண்ணை அவமானப்படுத்தும் விதமாக நக்கல் செய்து ஏளனமாக நடந்துகொள்வதும், அரசியலமைப்புச் சட்டம் வன்கொடுமைச் சட்டத்தின்படி தண்டனைக்குரியது. சீமானை இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின், தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக அவரைக் கைது செய்ய வேண்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# 10 பணக்காரர்களுக்கு 57% வருமானம்



வ.மணிமாறன்




# என்று தீரும் இந்தத் துயரம்?

**இந்தியாவில் 100 கோடி பேர் வாழ்க்கைத் தேவைகளுக்கு அச்சமின்றி செலவிடும் நிலையில் இல்லை என்பதை புளூம் வென்ட்சர்ஸ் ஆய்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் போக்கு நீடித்தால் என்ன ஆகும் என்பதையும் அந்த ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.**

உயிரோடும் உயிர்ப்போடும் வாழ்வதற்காக மானுட சமூகம் போராடி முன்னேறி வந்திருக்கிறது. ஆனால், வாழ்வதற்கான தேவைகளுக்குகூட செலவிட முடியாமல் பெரும்பான்மை மக்கள் பரிதவிக்கும் சூழல் தற்போது நிலவுகிறது. இதனை அண்மையில் வெளியான ஆய்வறிக்கை உறுதி செய்துள்ளது. 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில், 100 கோடிப் பேர் தங்களின் தேவைகளுக்கு அச்சமின்றி செலவிடும் நிலையில் இல்லை என்று புளூம் வென்ட்சர்ஸ் (Blume Ventures) முதலீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை கூறுகின்றது.

இந்திய மக்களில் 13 முதல் 14 கோடி பேர் வணிகச் சந்தை நிறுவனங்களின் நுகர்வோர்களாக இருக்கின்றனர். இந்தப் 14 கோடி பேரைக் கொண்ட சந்தையைத் தான் மதிப்புமிகுந்த சந்தையாக வணிக நிறுவனங்கள் கருதுகின்றன. இதனையடுத்து உள்ள 30 கோடி பேர் வளர்ந்துவரும் நுகர்வோர் என மதிப்பிடப்பட்டுள்ளனர். அதாவது சந்தையில் குவிந்துகிடக்கும் பொருட்களை வாங்கி தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால், விரும்பும் வகையில் செலவிடும் நிலையில் அவர்கள் வருமானம் இல்லை என்பதால், மிகுந்த தயக்கத்துடன் செலவுகளைச் செய்கின்றனர். டிஜிட்டல் பரிமாற்றங்களின் வளர்ச்சி செலவுகளை செய்வதற்கான தூண்டுதல்களை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவில் வசதி படைத்தவர்களிடமே மேலும்மேலும் செல்வம் சேர்கிறது. ஏற்கனவே பணக்காரர்களாக இருப்பவர்களே மேலும் பணம் படைத்தவர்களாக மாறுகின்றனர். புதிய செல்வந்தர்கள், பணக்காரர்கள் அதிகரிக்கவில்லை என்று இந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. இதனால் இந்தியாவின் நுகர்வுச் சந்தை விரிவடைந்த அளவுக்கு நுகர்வோர் எண்ணிக்கை பெருகவில்லை. அதாவது இந்தியாவின் நுகர்வுச் சந்தை தனித்துவமான வழியில் விரிவடைந்துள்ளது.

வெகுமக்களுக்குப் பயன்படும் பொருட்களுக்குப் பதிலாக, இருமடங்கு விலை மதிப்பு கொண்ட பொருட்களே சந்தைக்கு வருகின்றன. இதனை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கவே உற்பத்தி நிறுவனங்கள், பிராண்டுகள் முயற்சிக்கின்றன. இந்தச் சந்தையைத்தான் பிரீமியம் மார்க்கெட் என்று அழைக்கின்றனர்.

எளிதில் வாங்கக் கூடிய குறைந்த விலை வீடுகளின் விற்பனை 5 ஆண்டுகளுக்கு முன்பு மொத்த சந்தையில் 40 விழுக்காடாக இருந்தது. இந்த வீடுகளின் விற்பனை தற்போது வெறும் 18 விழுக்காடாகக் குறைந்துள்ளது. சந்தையில் பிராண்டட் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகிக் கொண்டுள்ளன. அதேநேரத்தில், சந்தையில் குறைந்த விலைப்பொருட்களின் விற்பனைக்காக போராட வேண்டிய நிலை உள்ளது. இதனால் குறைந்த விலை விற்பனை நிறுவனங்களின் எண்ணிக்கை, சந்தை வளர்ச்சி அடையவில்லை.

பெருந்திரளான மக்களைக் குறிவைத்து செயல்படும் நிறுவனங்கள், பிராண்டுகள் சந்தையில் இழப்பை சந்திக்கின்றன. பிரீமியம் என்று கூறப்படும் வசதிபடைத்த நுகர்வோரைக் குறிவைக்கும் நிறுவனங்களே வளருகின்றன என்று இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

நம் நாட்டில் ஏற்றத்தாழ்வான, சமச்சீரற்ற வளர்ச்சி அதிகரித்து வருகிறது. நாட்டின் மொத்த வருவாயில் முதல் 10 பணக்காரர்களுக்கு 57.7 விழுக்காடு வருமானம் சென்று விடுகிறது. இது 1990 ஆம் ஆண்டு 34 விழுக்காடாக இருந்தது.

நாட்டின் மொத்த வருவாயில் சரிபாதி மக்கள் பெற்றுக்கொண்டிருந்த 22.2 விழுக்காடு வருமானம், 15 விழுக்காடாக குறைந்துள்ளது. மக்களுடைய வாங்கும் சக்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவை இது வெளிப்படுத்துகிறது. இதனால் மக்களுடைய சேமிப்புகள் கரைந்து போவதுடன், கடன் சுமைகள் அதிகரிக்கின்றன. எளிமையாகச் சொன்னால் நடுத்தர வர்க்க மக்கள் நசுக்கப்படுகின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அவர்களின் சேமிப்புகள் கரைந்துள்ளன.

வருமான வரி செலுத்துபவர்களில், 50 விழுக்காட்டினரின் வருமானம் கடந்த பத்து ஆண்டுகளாக அதிகரிக்கவில்லை. பணவீக்கத்துடன் இதனை ஒப்பிட்டால், அவர்களின் வருமானம் பாதியாகக் குறைந்துள்ளது.

அதானி, அம்பானிகளின் பணப்பையை நிரப்புவதை மட்டுமே குறிக்கோளாக கொண்டுள்ள அரசும் அதன் கொள்கைகளும் இந்தப் போக்கை அதிகரிக்கவே செய்யும். பொருளாதார வளர்ச்சி என்பது கார்ப்பரேட் உற்பத்தி, கார்ப்பரேட் நிறுவனங்களுடன் ஒப்பந்தம், அவர்களுக்கு பெரும் வசதிகளை செய்து கொடுப்பது என்பதாகவே இருந்து வருகிறது. ஆனால், இந்த வளர்ச்சி மிகப்பெரும்பான்மையான மக்களின் முன்னேற்றத்துக்கு உதவவில்லை. சமூகத்தில், மக்கள் வாழ்க்கையில், பொருளாதாரத்தில் வளர்ச்சியைக் கொண்டுவரவில்லை என்று ஆய்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் போக்கு “நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பாதையை திசைதிருப்பும் ஆற்றலைக் கொண்டுள்ளது” என்று இந்த ஆய்வறிக்கை எச்சரிக்கிறது.

தொடர்புக்கு: 9500001224

# கவிஞர் நந்தலாலா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத் தலைவரும், தலைசிறந்த பட்டிமன்றப் பேச்சாளருமான கவிஞர் நந்தலாலா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்:

கவிஞர் நந்தலாலா பெங்களூரில், உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். இவர் பட்டிமன்ற மேடைகளில் தமிழகம் முழுவதும் பவனி வந்தவர். இவரது நகைச்சுவை ததும்பும் வாத முறை, எதிர்த் தரப்பாரையும் செவிமடுத்துக் கேட்க வைக்கும். இவரது வசீகரப் பேச்சால் ஈர்க்கப்பட்டவர்கள் ஒரு பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

இவரது கவிதைகள் சமூகச் சிக்கல்களுக்கான காரணங்களை “உள்ளங்கை நெல்லிக்கனி” எனத் தெளிவுபடுத்தும். அடித்தட்டு மக்களின் உரிமைக் குரலாக முழக்கம் எழுப்பும்.

பன்முக ஆளுமையரான நந்தலாலா தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து வந்தார்.

இவரது படைப்புகளில் “திருச்சிராப்பள்ளி : ஊறும் வரலாறு” தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறது.

வகுப்புவாத, மதவெறி சக்திகளின் சனாதனக் கருத்துகளை எதிர்த்துப் போராட்டம் தீவிரமாகி வரும் சூழலில், சமூக அமைதிக்கான கருத்துகளைப் பரப்புரை செய்து வந்த நல்லதொரு சொற்பொழிவாளரை தமிழ்நாடு இழந்து நிற்பது பெரும் துயரமாகும்.

நந்தலாலாவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், முற்போக்கு எழுத்தாளர், கலைஞர் சங்க நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# காரைக்குடி மாநகராட்சியில் பெண் ஊழியர் தற்கொலை முயற்சி!

## மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க ஏஐடியூசி கோரிக்கை

மார்ச் 4 ந் தேதி மதியம் காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் ஒரே பரபரப்பு எல்லோரும் ஓடிவருகின்றனர். மாநகராட்சியில் பணியாற்றும் பெண் ஊழியர் சர்மிளா கையில் ரத்தத்துடன் அழுது புரள்கிறார்.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் கதறுகிறார். மாநகராட்சி ஆணையரின் டார்ச்சரை என்னால் தாங்க முடியவில்லை. தினம் தினம் சித்ரவதை. என்னை சாகவிடுங்கள் என்று புலம்புகிறார். கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தேம்புகிறார்.

சக ஊழியர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றனர்.

அதுசரி! என்னதான் நடக்கிறது மாநகராட்சி அலுவலகத்தில்? புதிய ஆணையர் பொறுப்பேற்றதில் இருந்து, அனைத்துத் துறை ஊழியர்களையும் வரி வசூலில் ஈடுபடுத்துகிறார். வசூல் வசூல் என்று ஊழியர்களை விரட்டி அடிக்கிறார்.

காலை 8 மணிக்கே வசூல் ஏரியாவுக்குச் செல்ல நிர்ப்பந்தம் செய்கிறார். இரவு 9 மணிவரை வறுத்து எடுக்கிறார்.

சுகாதாரம், டிபிஓ உள்பட எந்த செக்சனும் இயங்கவில்லை. டார்ச்சரால் அனைத்து ஊழியர்களும் கொந்தளித்துப் போய் உள்ளனர். வெளியே சொல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

தினமும் இரவு 9 மணிவரை வேலை செய்கிறார். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையும் வரவேண்டும் என்றால் எப்படி வேலை பார்ப்பது? குழந்தைகளைப் பார்க்க முடியவில்லை, பராமரிக்க முடியவில்லை, குடும்பத்துடன் லீவில் இருக்க முடியவில்லை.

இதனால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார் சர்மிளா என்ற பெண் ஊழியர். வழக்கம் போல் மார்ச் 4 ஆம் தேதி டார்ச்சரால் மனம் வெறுத்த அந்த பெண் ஊழியர் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

பெண் ஊழியரைத் தொடர்ந்து டார்ச்சர் செய்து அவரை தற்கொலைக்குத் தூண்டிய மாநகராட்சி ஆணையர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க ஏஐடியூசி தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பி.எல்.ராமச்சந்திரன்

## மனச்சாட்சியுள்ள மனிதர்களின் சிந்தனைக்கு!

மூன்று சகிக்க முடியாத பெருந்தீங்குகள் தறிகெட்டு சட்டவிரோதமாக அடங்க மறுத்து அம்மணமாய் ஆடுகின்றன!

இதை ஆட்டு விப்பது ஒன்றியத்தை ஆளுகிற நெறிகெட்ட ஆட்சியாளர்கள்தான்!

**அதில் ஒன்று,**

ஆன்மீகப் போர்வைக்குள் மறைந்து வாழும் குற்றங்களின் பீடாதிபதி, ஜக்கி வாசுதேவ்!

பல இந்துக்களின் குடும்பக்



குலக்கொழுந்துகளை மொட்டை அடித்து மூளி ஆக்கிய, அந்தமாபாவி ஜக்கி அழைத்தால் குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் எனப் பலரும் ஓடோடி வருகிறார்கள்!

அதிகாரத்திலுள்ள இவர்கள் குடிமக்களைக் காப்பாற்றாமல், குடிமக்களால் குற்றம் சாட்டப்பட்டு வருகிற குடிகெடுப்பவனைக் காப்பாற்றுகிறார்களே.....!

அடுக்குமா இந்த அநியாயம்?

**இரண்டாவது,**

அநாகரீகத்தை நாகரீகம் போல் கற்றுக் கொண்டு, கற்றுக் கொடுக்கிற சீமான்!

இவர், சட்டவிரோதத்தைச்



சட்டபூர்வமானது போல் படம் காட்டுகிற கழிசடை மொழியாளர்!

**மூன்றாவது,**

மயிறு, டேய், வாடா, ஒரு தாய் தகப்பனுக்குப் பொறந்தவனா... நீ!

அண்ணாமலை ஐ.பி.எஸ் என்ற



மனிதனின் வாயிலிருந்து வந்து விழுந்த சொற்கள்தான் மேற்கண்டவை!

நாராச நடையின் நாயகனால் நாய்ச்சண்டை தோற்றது!

'விசமம்' நிறைந்த விசக் குப்பைகளை ஊக்குவிப்பது பாஜக அரசு!

இந்தத் தீய சக்திகளை வேரறுக்க வீதிக்கு வாருங்கள்!

**கே.சுப்பராயன் எம்.பி**

# சிலந்தி ஆற்றின் குறுக்கே கேரள அரசு த

# தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின்

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 27 வது மாநில மாநாடு, தஞ்சாவூரில் டாக்டர் வே.துரைமாணிக்கம் நினைவரங்கில் பிப்ரவரி 20, 21 ஆகிய தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது.**

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

### புயல் மற்றும் பெருமழை பாதிப்பிற்கு ஒன்றிய அரசு உடனடியாக நிவாரணம் வழங்கிட வேண்டும்

தமிழகத்தில் 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மழையில் 12 மாவட்டங்களிலும் கடந்தாண்டு வந்த பெஞ்சல் புயல் பெரும் மழையால் 18 மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான வேளாண் உற்பத்திகள்; நூற்றுக்கணக்கான குடியிருப்புகள்: மனித உயிரிழப்புகள்: கால்நடை இழப்புகள் உள்ளிட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் பெருமளவு பாதித்தன. உடனடியாக மாநில அரசு தன் நிதியைக் கொண்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. மீட்புப் பணிக்கும் நிரந்தரக் கட்டுமானத்திற்கும் சேர்த்து தேசியப் பேரிடர் நிதியிலிருந்து 37,000 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு கோரியது. ஒன்றிய அரசின் உயர் மட்டக் குழுக்களும்: ஒன்றிய அமைச்சர்களும் வந்து பார்வையிட்டதோடு சரி. இரண்டு வருடம் எட்டியும் தமிழக அரசு கேட்டிருந்த நிதியை இதுவரையிலும் கொடுக்காது, தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை மாநாடு கண்டிக்கிறது. ஒன்றிய அரசு உரிய நிதியை வழங்கிடக் கோரி தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டும் என மாநாடு கேட்டுக் கொள்கிறது.

### சிலந்தி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுத்திட வேண்டும்

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள சிலந்தி ஆற்றின் குறுக்கே, வட்டவடா என்ற இடத்தில் கேரள அரசு முதல் கட்டமாக 2.5 கோடி நிதி ஒதுக்கி, 10 அடி உயரம், 120 அடி நீளத்தில் தடுப்பணை அமைக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது. திருப்பூர், கரூர் மாவட்டங்கள் உள்ளிட்ட பல பகுதிகளுக்குப் பாசனம் மட்டுமல்ல, குடிநீர்ப் பயன்பாடும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் பாதிக்கும்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பில், சிலந்தி ஆற்றில் வரும் நீர் சேர்க்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறை அனுமதியில்லாமல் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு எதிராக இது கட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் தென் மண்டல தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் தானாக முன் வந்தது. இப்பிரசினையை விசாரணைக்கு எடுத்துள்ளது வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு அரசும் இதில் இணைவதுடன், உச்சநீதிமன்றத்தில் தனி வழக்கு தொடுத்திட வேண்டும் என மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### கரும்பு 8.5 சர்க்கரைப் பிழிதிறனை அடிப்படையாகக் கொண்டு டன் ரூ.5000 என விலை நிர்ணயம் செய்க

தமிழகத்தில் தனியார் மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளின் சாகுபடி பரப்பிற்கு ஏற்ப இயங்கி வந்த நிலையில், சில மாவட்டங்களில் நெல்பயிருக்கு மாற்றாகவும் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வந்தனர். ஆனால், கடந்த ஆண்டுகளில் ஆலைகளின் நிர்வாகச் சீர் கேட்டாலும், ஊழலாலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நலிவடைந்து முடக்கப்பட்டுள்ளன. சில தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடம் செய்த மோசடியால் மூடப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான ரூபாய் கரும்பு கொள்முதலுக்கான பணம் விவசாயிகளுக்குக் கொடுக்காமல் நிலுவையில் உள்ளது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் சிபில் ஸ்கோர் பிரச்சனையில் உள்ளனர். இந்தப் பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வு கண்டு, மீண்டும் அனைத்து ஆலைகளையும் இயக்கிட அரசு அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தற்பொழுது கரும்பின் 9.5 சர்க்கரை பிழி திறனை அடிப்படையாகக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது. முன்பு போல் 8.5 சதம் நிலையில் விலை நிர்ணயம் செய்திட வேண்டும். கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும்.

காவிரி டெல்டா மாவட்டங்கள் வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டதால், பல்வேறு போராட்டங்களுக்குப் பின் தமிழக அரசால் பாதுகாப்பு மண்டலம் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் நான்கு ஆண்டுகள் கடந்தும், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயலாக்கத்தில் இல்லை. இந்த நிலையில், கீழ்கண்டவற்றை நிறைவேற்றிட வேண்டும்.

### வேளாண்மை அல்லாத வேறு திட்டங்களுக்கும் நிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது

வேளாண்மை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட காகிதத் தொழிற்சாலை; தவிடு மற்றும் தேங்காய் கொப்பரையைக் கொண்டு எண்ணெய் உற்பத்தி ஆலை, கடல்சார் பொருட்களை ஆதாரமாகக் கொண்ட தொழில்கள் தொடங்க வேண்டியும். இதர வாய்ப்பான துணைத் தொழில்கள் இங்கு அமைத்திட வேண்டும்

காவேரி பாயும் இதர மாவட்டங்களின், வட்டாரங்களையும் இணைத்திட வேண்டும். மண்டலச் சட்டத்தில் உள்ள விதியின் படிவருடத்தில் இரு தடவை இதன் செயலாக்கக் குழு கூட்டத்தை நடத்திட வேண்டும். அனைத்து மாவட்டங்களில் இதற்கான குழுக்கள் அமைத்திட வேண்டும், விவசாயச் சங்கப் பிரதி நிதிகளை இக்குழுவில் இணைத்திட வேண்டும்.

கனிம வளக் கொள்ளையிலிருந்து காடு, மலை, பூமி, கடல் வளங்கள், சுற்றுசூழல், உயிர்வாழ் இனங்களைக் காப்பாற்றிட வேண்டும்.

விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியில் செயற்கைக் கோள்களின் மூலம் பூமி, மலைகள், கடலுக்கு அடியில் இருக்கும் கனிம வளங்களைக் கண்டறியும் வாய்ப்பு உள்ளது. இந்நிலையில், 1957ல் நிறைவேற்றப்பட்ட சுரங்கம், கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்காற்றுச் சட்டத்தை 2023 ஆம் ஆண்டு திருத்தம் செய்து, டங்ஸ்டன், டைட்டானியம், லித்தியம், பெர்லியம், நியோபியம் ஆகிய 6 கனிமங்களைத் தடையிலிருந்து நீக்கியதால், இனி தனியார்களும் இதை வெட்டி எடுத்து விற்பனை செய்யலாம் என்ற ஏற்பாட்டைச் செய்துள்ளது. ஒன்றிய அரசின் சுரங்கத் திருத்தச் சட்டங்கள் மூலமாக மாநில அரசுக்குத் தெரியாமல் கூட தனியார் நிறுவனங்களே நேரடியாக ஆய்வு செய்திட அனுமதிக்கிறது.

தற்போது பூமிக்கடியில் உள்ள இப்படியான வளங்களைக் கொள்ளையடித்திட கார்ப்பரேட்டுகள் போட்டி போட்டுக் களத்தில் இறங்கியுள்ளனர். தமிழ்நாட்டில் புதுக்கோட்டை நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் ஜெம்லேபரட்டீஸ் நிறுவனம்




மக்களின் தொடர்ப் போராட்டத்தால் நிறுத்தப்பட்டது. மதுரை அரிட்டாபட்டியைச் சுற்றியுள்ள 13 கிராமங்களில் டங்ஸ்டன் வெட்டி எடுக்க வேதாந்தா நிறுவனத்திற்கு ஏலம் விடப்பட்டு, மக்கள் போராட்டம் மூலம் நிறுத்தப்பட்டுள்ளது. இப்படித் தொடர்ந்தால், நில அடுக்குகள் இடம் மாறி நில அதிர்வு, சுனாமி, காற்று மாசு ஏற்படும். காடுகள், மலைகள் அழிப்பு, சூழல் கேடு ஏற்பட்டு உயிரினங்கள் வாழ்வு நிலைகள் பாதிக்கும். எனவே, தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்து மாநில மக்களின் நலன்களைக் காத்திட வேண்டும்.

### தன்னாட்சி அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியமே காவிரிப் பிரச்சனைக்குத் தீர்வு

ஒவ்வோர் ஆண்டும் காவிரி நீர் கோரி விவசாயிகள் போராடுவதும், தமிழக அரசு வாதாடுவதும், நியாயப் பங்கீடு செய்ய வேண்டிய ஒன்றிய அரசும், காவிரி ஆணையமும் கர்நாடகத்துக்குத் துணை போவதும் தொடர் கதையாக உள்ளது. இதனால் சராசரி மழை வளம் குறையும் ஆண்டுகளில், விவசாயிகளின் வேளாண் பொருளாதாரம், 20க்கும் மேற்பட்ட மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரம் தொடர்ந்து பாதிக்கிறது.

60 ஆண்டு காலப் போராட்டத்திற்குப் பின், காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பு, பின் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு நமக்குரிய நீரை வழங்காத நிலையில், தீர்ப்பின் படி கூட உரிய காலத்தில் தண்ணீர் கொடுக்காத கர்நாடகத்துக்குத் துணை போகும் காவேரி ஆணையம், உரிய அறிவுறுத்தலைச் செய்யாத ஒன்றிய அரசு, இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தை நாடி குறைந்தபட்சத் தண்ணீரே பெற முடிகிறது. எனவே, முன்பு தமிழ்நாடு அரசு கேட்டது போல, தன்னாட்சி அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட உச்ச நீதிமன்றத்தில் முறையிட வேண்டும்.

### தென்பெண்ணையாறு பிரச்சனைக்கு நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும்

தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒப்பந்த நிலைகளுக்கு மாறாக கர்நாடக அரசு தொடர்ந்து தடுப்பணைகளைக் கட்டி வருவதும், இதன் துணை நதியான மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே யார்க்கோல் எனும் இடத்தில் நீண்ட மதில் சுவரைக் கட்டி தண்ணீரே வராமல் தடுத்து வருகிறது. இதனால் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள் கடுமையான பாதிப்பில் உள்ளன. தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், தென்பெண்ணையாறு நீர்ப் பங்கீட்டிற்கு ஒன்றிய அரசு நடுவர்மன்றம் அமைத்திட வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. எனவே, ஒன்றிய அரசு உடன் நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும். மேலும் யார்க்கோல் தடுப்பணையை உடன் அகற்றிட வேண்டும்.

# டுப்பணை கட்டுவதைத் தடுத்திட வேண்டும்
# 27வது மாநில மாநாட்டு தீர்மானம்




### அரசு பொதுத்துறை வேளாண்மைக் காப்பீடு திட்டம் வேண்டும்.

வேளாண்மைக் காப்பீடு திட்டத்தில் தனியார் கம்பெனிகள் ஈடுபடுத்தப்பட்ட நிலையில், தன் முகவர்களைப் பயன்படுத்தி பயிர் மகசூல் கணக்கிடு செய்கிறது. இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட காலங்களில்கூட அனைவருக்கும் காப்பீடு திட்ட இழப்பீடு கிடைப்பதில்லை. 20222023 ஆம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அறுவடை நிலையில் கதிர்கள் சாய்ந்து அழுகி பேரிழப்பு வந்தது. இப்படியான பாதிப்பிற்கு தமிழ்நாடு அரசு ஏக்கர் ஒன்றுக்கு 5,400 மட்டுமே வழங்கியது. எஞ்சிய இழப்பீடுத் தொகை காப்பீடு திட்டம் மூலம் கிடைக்கும் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. பின்னர் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கையில் இருந்தனர்.

இந்தப் பருவத்திற்கான காப்பீடில் விவசாயிகளின் பங்குத்தொகை 120 கோடி ரூபாய், தமிழ்நாடு அரசின் பங்காக 1325 கோடி, ஒன்றிய அரசின் பங்காக 874 கோடி எனக் கூடுதல் 2,319 கோடி ரூபாய் காப்புத்தொகையாக மட்டும் பெற்ற நிறுவனங்கள், 8 மாதங்களுக்குப் பின் விவசாயிகளுக்கு வழங்கிய தொகை ரூ.560 கோடி மட்டுமே. ரூ.1759 கோடி கம்பெனிகளுக்கு லாபம். பெரும்பகுதி ஆண்டுகளில் இதே நிலைதான். கடந்த 15 ஆண்டுகளாகப் பருவம் தவறிய மழை, வெள்ளம், வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை எனத் தொடர்ந்து பாதித்து வரும் நிலையில், கடந்தாண்டுகளின் நெல் மகசூலைக் கணக்கிட்டுக் குறைவுக்கு இழப்பீடு வழங்குவது என்பதே நியாயமுறை அல்ல.

எனவே, தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் பங்கேற்போடு அரசின் பொதுத்துறைக் காப்பீடு திட்டத்தை அமல்படுத்திட வேண்டும்.

### கூட்டுறவுச் சட்டம் 2020, 2023ஐ ஒன்றிய அரசு திரும்பப் பெறு

கிராமப்புறங்களில் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களையும், வங்கிகளையும் ஒன்றிய பாஜக அரசு ஒழுங்குபடுத்தும் சட்டம் 2020 பிரிவு 12(1) படி, கூட்டுறவு அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கான ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது. இதன் நோக்கம் மாவட்ட, மாநில, தொடக்கக் கூட்டுறவு நிதி நிறுவனங்களைத் தனியார் மற்றும் கார்ப்பரேட் மயமாக்கிடும் நோக்கமாகும். பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 2023 பிரிவு 26 பங்குகளை யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், புதிய 63 வது பிரிவு கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாகச் செயல்படும் உரிமையைப் பறிக்கிற நிலையில் உள்ளது. இப்கோ, கிரிப்கோ, நாஃபெட் போன்ற கூட்டுறவு நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தும் ஆபத்தும் உள்ளது. இதனால் உணவுப் பாதுகாப்புச் சட்டமும் ஆபத்துக்குள்ளாகும். கிராமப்புற விவசாயிகளின் எளிய அணுகுமுறையும் இதனால் பாதித்திடும். ஆகவே, கூட்டுறவு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் முடிவை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

### ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே கட்டிடும் தடுப்பணைகள் பேராபத்து

ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள் கட்டிய தடுப்பணைகளுக்குப் பிறகு, பின் வந்த முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிபாளையம் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே மூன்று தடுப்பணைகளைக் கட்டிட அடிக்கல் நாட்டினார். ரூ.535 கோடியில் 5,000 ஏக்கர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 215 கோடி ரூபாயில் 0.6 டிஎம்சி கொள்ளளவு கொண்ட அணைக் கட்டுமானம் விரைவில் தொடங்கப்படும் எனவும் கூறியுள்ளார். தற்பொழுது மீண்டும் முதல்வரான சந்திரபாபு நாயுடு மேலும் மூன்று துணை அணைகள் கட்டப்படும் என்ற வாக்குறுதி தந்துள்ளார்.

நதிநீர் தாவா சட்டம் 1956 படியும், பன்மாநில நதிநீர் உடன்பாட்டின் படியும் பாலாறு பாசனம் நமக்கான அடிப்படை உரிமையாகும். இது எதையும் மதிக்காது கீழ் மாநில உரிமையைப் பறித்து அரசியல் பதவி வேட்கையில் தொடர்ந்து ஆந்திர அரசு இதில் ஈடுபட்டு வருகிறது. இதுவரை 28 தடுப்பணைகள் ஆந்திரா அரசால் கட்டப்பட்டுள்ளன. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் இரு வழக்குகளைத் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. ஆகவே, புதிய தடுப்பணைகளுக்கு எதிராக தடையாணை பெற்றிட வேண்டும். பாலாற்றின் நதிநீர்ப் பங்கீட்டிற்கு நதி நீர் தீர்ப்பாயம் அமைத்திட உச்சநீதிமன்றத்தில் முறையிட வேண்டும் என மாநாடு கோறுகிறது.

### காட்டுவாழ் விலங்கினங்களைப் பாதுகாத்திட, காட்டைப் பாதுகாத்திடு..!

காடு விலங்கினங்களால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு மனிதர்களுக்கு உரிய தடுப்பு.. நிவாரணம் வழங்கிட வேண்டும்.

வனவிலங்குகளால் மனித உயிர் இழப்பு : வாழ்வு நிலைப் பாதிப்பு: வேளாண்மை இழப்பு ஏற்படுகிறது. இழந்த காடுகளை ஈடு செய்வதற்குப் புதிய காடுகளை உருவாக்காமல்... இருக்கும் காடுகளின் எல்லைகளை மட்டும் விரிவாக்கம் செய்து தொழில் நிறுவனங்கள் பெருக்கத்திற்கும்; இயற்கை வளங்கள் சுரண்டலுக்கும் தடையின்றி அனுமதிக்கபடுகிறது. இதனால் காடுகளில் வாழ்ந்த யானை, புலி, சிறுத்தை, பன்றி, மயில்கள் உள்ளிட்ட காடு விலங்குகள் தன் உணவு மற்றும் நீர்த் தேவைக்குக் காடுகளை விட்டு வெளியேறி மக்கள் வாழ்விடங்களுக்கு வந்து தனக்கான உணவு ஆதாரத்தை மலையடி அடிவாரப் பகுதிகளில் தேடி வரும்போது வேளாண்மையை அழித்து நாசப்படுத்துகிறது. குறுக்கிடும் நபர்களைத் தாக்குவதும் சில நேரங்களில் வெறிகொண்டு மனிதர்கள் கால்நடைகளைத் தாக்குவதால் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அண்மைக்காலமாகச் சமவெளிப்பகுதிகளிலும் பன்றிகள் மயில்களின் பாதிப்பு பெருகி வருகிறது. எனவே, நீண்ட காலமாக விவசாயிகள் வலியுறுத்தி வரும் வன விலங்குப் பாதுகாப்புச் சட்ட வரன்முறையில் இருந்து பன்றிகளை நீக்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். தமிழக அரசு 1.1.2025 அன்று வனச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களில் இதற்கான பாதுகாப்புகள் இல்லை. எனவே, விவசாயிகள் தன்னை தன் வேளாண்மையைப் பாதுகாத்துக் கொள்ள தற்காப்பு நடவடிக்கைகளுக்கு அரசு சட்டபூர்வ அனுமதி தந்திட வேண்டும். இறந்தவர்களுக்கு நீதிமன்ற வழிகாட்டுதலின்படி 20 லட்ச ரூபாய்; உடல் அவயங்கள் பாதிப்பு மற்றும் வேளாண் பயிர்கள் ஆடு மாடுகள் பாதிப்பிற்கும் பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப உரிய நிவாரணத் தொகை வழங்கிட வேண்டும். கிருஷ்ணகிரி மற்றும் சில மாவட்டங்களில் யானைகளின் பாதிப்பிலிருந்து மீண்டிட அடிவாரத்தில் அகழிகள் வெட்டுவதற்கான நடவடிக்கை வேண்டும்.

### தமிழ்நாடு அரசின்... நில ஒருங்கிணைப்புச் சட்டம் 2023 ஐ திரும்பப் பெறுக

நிலம் கையகப்படுத்துவதற்குப் பல சட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தச் சட்டங்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி.. அனுமதி என்றால் சில கட்டுப்பாடுகளுடன் மட்டுமே நிலத்தை எடுப்பதற்கு அனுமதி கிடைக்கும். எனவேதான் கட்டுப்பாடுகள் என எதுவுமே இல்லாமல் எந்த நிறுவனம் அல்லது நபர்.. ஒரு திட்டத்திற்காக 250 ஏக்கருக்கு மேல் நிலம் கேட்டு அரசிடம் விண்ணப்பித்தால் அந்த நிலத்திற்குள் நீர்நிலைகள் இருந்தாலும், தனியார் நிலங்கள் இருந்தாலும், எந்தத் தடையும் இல்லாமல், கருத்துக் கேட்பும் நடத்தாமல் உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெறாமலேயே அந்நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்கான ஓர் ஆபத்தான சட்டம் இது. தொழில் வளர்ச்சி என்ற பேரால் எதிர்கால ஆபத்தை உருவாக்கிடும் இந்தச் சட்டத்தை அனுமதிக்க முடியாதெனத் தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் போராடி வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசு இந்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

### மரபணு மாற்றப்பட்ட விதைகளைத் தடைசெய்திடுக

உணவு உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் ஏற்றுமதியை அதிகரித்து, உலகப் பொருளாதாரத்தோடு போட்டி போட வேண்டும் என்ற வெறியில் மரபணு மாற்றப்பட்ட விதைகளை அரசுகள் அனுமதித்து வருகின்றன. இப்படியான விதைகளின் பாதிப்புகளைக் கண்டறிய இந்தியாவிலே ஆய்வுக்கூடம் இல்லை என ஒரு வழக்கில் உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசால் சொல்லப்பட்டுள்ளது. இப்படியான விதைகளை அனுமதித்திட ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. எந்த அனுமதியும் பெறாமலேயே பல்வேறு மரபணு மாற்றப்பட்ட விதைகள் வெளிவருகின்றன. இப்பயிர்களின் சோதனை என கோவை வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய அரசு துறைகளில் நுகர்வோர் கருத்தறியாமல் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்களாலேயே உணவு நஞ்சாகி உயிர் நிலை: உடல்நலம் பாதிக்கும் நிலை உள்ளது. மரபணு மாற்றப்பட்ட விதைகளைப் பயிரிட்ட விவசாயிகள் உற்பத்தி இழந்து; கடனில் மாய்ந்து : தற்கொலைக்கு ஆயிரக்கணக்கானோர் தள்ளப்பட்டுள்ளனர். உலகத்தின் பல நாடுகள் மரபணு பயிர்களைத் தடை செய்துள்ளது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி உள்ளிட்ட தானியங்கள் மரபணு மாற்றப்பட்டது என அந்த நாடுகள் நமது ஏற்றுமதியை அங்கே முடக்கி உள்ளது. இந்நிலையில் மேலும் மேலும் மரபணு மாற்றுப் பயிர்களைப் பல்வேறு நிலைகளில் புகுத்துவதற்ககான திட்டங்களில் அந்நிய விதைக் கம்பெனிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளை ஒன்றிய மாநில அரசுகள் எடுத்து வருவதை நிறுத்திட வேண்டும். எனவே, மரபணு மாற்றுப் பயிர்களை உலகத்தில் பல நாடுகள் தடை செய்துள்ள சூழலில் இந்தியாவும் தடை செய்திட வேண்டும். அதற்கு தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

## சர்வதேச நுண்ணறிவு மாநாடு - கபூர்

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில், சர்வதேச நுண்ணறிவு மாநாடு பிப்ரவரி 11 இல் நடைபெற்றது. இந்தியாவின் சார்பில் பிரதமர் மோடி அவர்களும் பங்கேற்று ள்ளார். உலகில் 195 நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்த கணக்குப்படி. பல சிறு தீவுகள் இன்றும் இருக்கிறது. அது ஏகாதிபத்திய பிடியில் இருக்கிறது. அவை ஒவ்வொன்றும் தன்னுரிமை பெற்றால் உலக நாடுகளின் எண்ணிக்கை அதிகமாக கூடும். 195 நாடுகளில் 100 நாடுகள் மட்டுமே மாநாட்டில் பங்கேற்றுள்ளன. 95 நாடுகளுக்கு அழைப்பு இல்லை. இந்த 95 நாடுகளும் ஏழை நாடுகள். அவர்களுக்கு ஏஐ தொழில்நுட்பம் தேவையில்லையா?. வளர்ந்த நாடுகளும், வளர்முக நாடுகளும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டால் போதுமா?. மாநாட்டை ஒருங்கிணைத்த பிரான்ஸ் இதுவரை மேலாதிக்க நாடுகளோடு மட்டுமே தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டுள்ளது.

இந்தியா வளர்முக நாடு, பிரான்ஸ் வளர்ந்த நாடு, வல்லரசு நாடு, தொழில்நுட்பத்தில் வளர்ந்த நாடு. பிரான்ஸ் நமக்கு இதுவரை ராணுவ தொழில்நுட்பத்தையோ அல்லது நிகழ்கால ஏஐ தொழில்நுட்பத்தையோ பகிர்ந்து கொண்டது உண்டா ஏன்?. அதாவது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இதுவரை முன்னேறி இருப்பது அமெரிக்கா. தற்போது தான் அதனை பின்னுக்குத் தள்ளி சீனா முதலிடம் பெற்றுள்ளது. இதுவரை முதலிடத்தில் இந்த அமெரிக்க உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவிற்கு ஏஐ தொழில்நுட்பத்தை பகிர்ந்தது உண்டாது உண்டா, இல்லை. அமெரிக்காவின் சிலிக்கான் தொழில்நுட்ப மையத்தில் இந்தியர்கள் உண்டு. அவர்களுக்கு கூட செயற்கை நுண்ணறிவு ரகசியங்கள் சொல்லப்படுவதில்லை. அமெரிக்காவின் மிக உயர்ந்த பதவிகளில் இந்தியர்கள் இருந்தாலும் கூட, அவர்களுக்கு ரகசியங்களை தரக்கூடாது என்பது அமெரிக்கா சட்டம்.

சீனா தனது தொழில்நுட்பத்தை வளர்முக மற்றும் ஏழை நாடுகளுக்கு பகிர்ந்து கொள்ள தயார் என்று பிரகடனம் செய்கிறது. மறுபக்கம் அது பிற நாடுகளின் தொழில்நுட்பத்தை கோருகிறது. இதற்கு இதுவரை எந்த நாடும் தயார் இல்லை.

சீனா தொழில்நுட்பம் டீப் சீக் வெளிவந்தவுடன் சீனாவின் ஒட்டுமொத்த ஏஐ தொழில்நுட்பமும் வளர்ந்து வருகிறது.

ஏஐ தொழில்நுட்பத்தில் அமெரிக்காவின் ஆதிக்கம் கூடாது உலக நாடுகள் இதுவரை ஏன் பேசவில்லை.

இங்கு அமெரிக்க ஆதிக்கம் அல்ல பிரச்சனை, சீனா வளர்ந்து சீனா ஆதிக்கம் செய்து விடக்கூடாது. ஐரோப்பிய நாடுகள் இதுவரை அமைதி காத்து தற்போது கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம் போன்றவற்றில் வளர்ச்சி காண்பதற்காக ஏஐ பரிமாற்றம் அவசியம் என்பதெல்லாம் பெரிய சூழ்ச்சி. அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் இதுவரை ஆப்பிரிக்க நாடுகளுக்கு உதவிய தொழில்நுட்பம் ஒன்று உண்டா.

ஆப்பிரிக்காவின் வளங்களை கொள்ளை அடித்த நாடுகள் ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தான். இவர் ஏழை நாடுகளோடு தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்வேன் என்பது வெறும் பிம்பம் மட்டுமே.

இதுவரை உலகை ஆதிக்கம் செய்து கொள்வதற்காக எண்ணற்ற பொய்களைக் கூறிய அந்த வளர்ந்த பணக்கார ஏகாதிபத்திய நாடுகள் ஏழை நாடுகளோடு தொழில்நுட்பத்தை பகிர்வோம் என்பது நம்ப முடியாது.

# ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக பொது வேலைநிறுத்தத்திற்குத் தயாராவோம்!

**தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலப் பொதுக்குழு கூட்டம் 2025 பிப்ரவரி 26, 27 தேதிகளில் தருமபுரி, அதியமான் அரண்மனை கூட்ட அரங்கில் தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் தோழர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.**

பொதுச் செயலாளர் தோழர் எம்.ராதாகிருஷ்ணன் ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு முடிவுகள் மற்றும் தமிழ்நாட்டு தொழிலாளர் நிலைமைகள், நடைபெற்ற இயக்கங்கள், உடனடிக் கடமைகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்தார். மாநிலச் செயலாளர்கள் சி.சந்திரகுமார், ஆர்.ஆறுமுகம், எஸ்.சின்னசாமி, என்.சேகர், ஆ.பாஸ்கர், ஆர்.தில்லைவனம், வி.ஆதிமூலம், துணைத் தலைவர்கள் என்.செல்வராஜ், கே.மணி, எம்.சங்கையா, எஸ்.ஆர்.தேவதாஸ், எம்.ஜஹாங்கீர், சி.தங்கவேல், பொருளாளர் பீட்டர் துரைராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

## பொது வேலைநிறுத்தம்!

நான்கு புதிய தொழிலாளர் சட்டங்களை அமலாக்கும் உறுதியோடு புதிய தொழிலாளர் அமைச்சர் கொண்டு வரப்பட்டிருக்கிறார். அவர் மாநில தொழிலாளர் அமைச்சர்களோடு உரையாடி, தேவைப்பட்டால் சட்டவிரோத முறைகள் மூலமாகவும் தனது நோக்கத்தை நிறைவேற்ற தீவிரமாகத் துடிக்கிறார். அரசாங்கம் நான்கு தொழிலாளர் சட்டத்தையும் மூர்க்கமாக கொண்டு வர எண்ணியுள்ளது.

தொழிலாளர் அமைச்சர் புதிய தொழிலாளர் சட்டம் 1, ஏப்ரல் 2025 முதல் அமலாக்கப்படும் என்று திரும்பத் திரும்ப கூறிவருகிறார். தொழிற்சங்க செயல்பாட்டை முடக்கும் நோக்கத்துடன் இது நடக்கிறது. வெள்ளைக்கார ஆட்சியில் இருந்து கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி பெற்ற தொழிலாளர் உரிமைகளை மறுக்கும் விதமாக இந்தச் சட்டங்கள் உள்ளன. இந்த சட்டங்கள் வேலை நிறுத்த உரிமையை மறுக்கிறது. சங்கங்களை பதிவு செய்வதை கடினமாக்குகிறது. சங்கங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்வதை எளிதாக்குகிறது. சமரசமும், தீர்ப்பாயங்களின் முடிவும் கடினமாகிறது. தொழிலாளர் நீதிமன்றங்களை இல்லாமலாக்கி, தொழிலாளர் தீர்ப்பாயங்களைக் கொண்டு வருகிறது. தொழிற்சங்க பதிவாளருக்கு, சங்கப்பதிவை ரத்து செய்ய கூடுதல் அதிகாரங்களைத் தருகிறது. சம்பளத்திற்கான வரையறையை மாற்றுகிறது. குறைந்தபட்ச ஊதியத்தில் உள்ள வீட்டு வாடகைக்கான அம்சத்தை அடியோடு நீர்த்துப்போகச் செய்கிறது. தொழில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் வேலை நிலைமைகள் (OSH) சட்டத்தில் தொழிலாளர் பாதுகாப்பு அபாயத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆய்வுகள் என்பது நீக்கப்பட்டு அதற்கு பதிலாக முதலாளிகளுக்கு உதவி செய்பவர் (facilitator) என்ற முறை கொண்டுவரப்பட்டுள்ளது தொழிலாளர் சட்டத்தில் 100 லிருந்து 300 என எண்ணிக்கையை உயர்த்தியதன் மூலம் 70% ஆலைத் தொழிலாளர்களை ஆட்குறைப்பு, வேலை நீக்கம் போன்றவைகளை எதிர்கொள்ள வைத்து, அவர்களை தொழிற்சாலைகளின் தயவில் இருத்தி வைக்கிறது. தொழிற்சாலை சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றமும் பெருவாரியான தொழிலாளர்களை தொழிலாளர் பாதுகாப்பிலிருந்து விலக்கி வைக்கிறது. குறித்த கால வேலைவாய்ப்பில் பணிபுரிபவர்களுக்கு எத்தகைய தொழிலாளர் பாதுகாப்பும் இல்லை. கணக்கற்ற முறையில் பயிற்சியாளர் திட்டம் பயிற்சியாளர்களை வைப்பது, அவர்களை கண்டிப்பாக வேலைக்கு எடுத்துக் கொள்வது தேவையில்லை என்பது இன்னொரு சுரண்டலாகும். சட்டத்தில் முதலாளிகளுக்கு தண்டனை என்பது நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் தொழிற்சங்க தலைவர்கள் மீது அற்ப காரணங்களுக்காக தண்டனைகளை அதிகரிக்க செய்துள்ளது. ஒப்பந்தக்காரர்கள் உரிமம் பெறுவதற்கான எண்ணிக்கையை 20 இலிருந்து 50 ஆக உயர்த்தி உள்ளது. ஒப்பந்த முறையும், வெளிச்சந்தை முறையும் இயல்பான ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை. அதே சமயம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு தடை உள்ளது. இதனால் வேலையின்மை அதிகரித்து வருகிறது. இதுபோன்று பலவற்றை சொல்ல முடியும்.

## தமிழ்நாடு ஏஐடியுசி மாநில பொதுக்குழு தீர்மானம்




மத்திய தொழிற்சங்கங்கள் 18.3.2025 அன்று, தேசிய மாநாட்டை டெல்லியில் நடத்த உள்ளது. இந்த மாநாடு மே, 2025 ல் பொது வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுக்கும் வகையில் தொடர் போராட்டங்களை அறிவிக்க உள்ளது. இப்போராட்டங்களில் முனைப்புடன் பங்கேற்பதற்பு உரிய நடவடிக்கைகளை தமிழ்நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்கள் இப்போதிருந்தே துவங்கி விட்டன. இப்போராட்டங்களில் ஏஐடியுசி சங்கங்கள் சக்தியாக பங்கேற்பதென்றும், தமிழ்நாட்டின் தொழிலாளி வர்க்கம் முழுமையாக இப்போராட்டங்களுக்கு ஆதரவளித்து பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

## மே 5 அறிவியல் அடிப்படையில் குறைந்த பட்ச ஊதிய கோரிக்கை தினம்

1948இல் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1957 ல் இந்திய தொழிலாளர் மாநாட்டின் (ஐஎல்சி) 15ஆவது அமர்வில் ''குறைந்தபட்ச ஊதியம், தேவை அடிப்படையிலானதும், தொழிலாளிக்கு குறைந்தபட்ச மனிதத் தேவைகளை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும் என்றும், சம்பாதிக்கும் ஒருவரைச் சார்ந்து மூவர் நுகர்வோர்கள் இருப்பதாகக் கொண்டு பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் வருவாயைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், டாக்டர் அக்ராய்டின் பரிந்துரைப்படி, ஒரு நாளைக்கு 2700 கலோரிகள் உணவு தேவைப்படும் என்ற அடிப்படையில் குறைந்த பட்ச உணவு பொருட்களுக்கான சந்தை விலை கணக்கிடப்பட வேண்டும்.

நான்கு பேர் கொண்ட தொழிலாளியின் குடும்பத்திற்கு 72 கஜம் துணி, அரசாங்கத்தின் மலிவான தொழிற்சாலை வீட்டுத் திட்டத்தில் வாங்கப்படும் குறைந்தபட்ச வாடகை, எரிபொருள், விளக்கு மற்றும் பிற செலவினத் தேவைகள் மொத்த குறைந்தபட்ச ஊதியத்தில் 20 சதவிகிதமாக எரிபொருள், செலவினங்களுக்கு, குழந்தைகள் கல்வி, மருத்துவத் தேவைகள், திருவிழாக்களும் சடங்குகளும் உள்ளிட்ட குறைந்தபட்ச பொழுதுபோக்கு, முதுமைக்கான ஒதுக்கீடு, திருமணத்திற்கான ஒதுக்கீடு போன்றவற்றிற்காக மேலும் 25 சதவீதம் இருக்கும்படியாக குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். குறைந்தபட்ச ஊதியத்தை வேலை அளிப்பவர்களின் கருத்தை கேட்டோ, அல்லது அவர்களது வழங்கும் தகுதியை மதிப்பிட்டோ நிச்சயிப்பது கூடாது.

தற்போதைய சூழலில் வாழ்க்கைக்கான அடிப்படைத்தேவைகள் இன்னமும் அதிகரித்து உள்ளன. குடும்பம் என்ற நிலையில் பெற்றோரை பராமரிக்கும் பொறுப்பு பிள்ளைகளின் சட்டபூர்வ கடமையாக்கப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை ஐந்தாக சட்டப்படியே உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் அறிவியலுக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாத வகையில் நிர்ணயிக்கப்பது தொடர் கதையாக உள்ளது. அதனையும் அமுலாக்கும் கடமையும், பொறுப்பும் உள்ள தொழிலாளர் துறை அமுலாக்க முன்வராததால் அரசாணைகள் பல ஏட்டுச்சுரைக்காயாக உள்ளன. எனவே ஒன்றிய, மாநில அரசுகள் அறிவியல் அடிப்படையில் ஏற்கப்பட்டவாறு கணக்கீடு செய்து குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கவும் அதனை அமுலாக்கவும் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி மாமேதை கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளான மே 5 ஆம் தேதியன்று அறிவியல் அடிப்படையில் குறைந்த பட்ச ஊதிய கோரிக்கை தினம் கடைபிடித்து இயக்கங்கள் நடத்த ஏஐடியுசி அறைகூவல் விடுத்துள்ளது. அன்று தமிழ்நாட்டில் மாவட்ட தலைநகர்களிலும், தொழில் மையங்களிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதென்று தீர்மானிக்கிறோம்.

## மீனவர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்து:

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எல்லையை தாண்டி மீன் பிடித்ததாக கூறி மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்துவது, மீனவர்கள் கைது, மீன்பிடி படகுகள் சிறை பிடிப்பு, மீன்பிடி படகுகளை ஏலம் விடுவது, லட்சக்கணக்கில் அபராதம் போன்ற செயல்களில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதை தடுத்து நிறுத்திடவும், சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க ஒன்றிய, மாநில அரசுகள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இகோரிக்கைகளை போராடிவரும் மீனவர்களுக்கு ஆதரவினை தெரிவிப்பதோடு, ஒன்றிய, மாநில அரசுகள் மீனவர்களுடன் பேசி தீர்வு காண முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மீனவர்களுக்கு ஏப்ரல் 15 முதல் ஜீன் 14 வரையிலும் மீன்பிடி தடைகாலநிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் பிடித்து வரும் மீன்களை சந்தைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் மீன் விற்பனை தொழிலாளர்களும் மீன்பிடி தடை காலங்களில் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். எனவே, மீனவர்களுக்கு வழங்குவது போன்று மீன் விற்பனை தொழிலாளர்களுக்கும் ரூ.4000/ மீன்பிடி தடை கால நிவாரணமாக தமிழ்நாடு அரசு வழங்கிடவேண்டும்.

## புலம் பெயர் தொழிலாளர்களுக்கு தனி நலவாரியம் அமைத்திடுக!

50 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து புலம் பெயர்ந்து வந்து தமிழ்நாட்டில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் குறைந்த கூலிக்கு, கூடுதல் நேரம் கடுமையாக வேலை வாங்கப்பட்டு வருகின்றனர்.

தங்களது கடும் உழைப்பின் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை இத்தொழிலாளர்கள் வழங்கி வருகின்றனர்.

வெளி மாநிலத் தொழிலாளர்கள் ரயில் நிலையங்களில் வந்து இறங்கும்போது மிரட்டுவது, குடியிருக்கும் இடங்களுக்கு சென்று அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்திட, தொழிலாளர் துறை மூலம் தொழிற்சங்கங்கள் உதவியுடன் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அனைவரையும் கணக்கெடுத்து, அடையாள அட்டை வழங்கி தொழிலாளர் நலச் சட்டங்களின் படியான உரிமைகளை உறுதி செய்வதற்கு தொழிலாளர் நலத்துறையில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் தலைமையில் புலம்பெயர் தொழிலாளர் பிரிவை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என்றும்; அரசு, வேலை அளிப்பவர், தொழிலாளர் பிரதிநிதிகளை கொண்ட முத்தரப்பு குழு அமைத்து அவ்வப்போது இத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விவாதித்து தீர்வு காண வேண்டும்.

மேலும், தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

## போராடும், ஜனநாயக உரிமைகளை பறிக்காதீர்!

தமிழ்நாட்டில் ஜனநாயகப் பூர்வமான இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை நடத்துவது என்பது பெரும் சவாலாக மாறிவருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை சமீபத்தில் தந்த தீர்ப்பு ஒன்றில், தமிழ்நாட்டில் பொது இடங்களில் உள்ள கொடி மரங்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்றும், தேவைப்பட்டால் அவரவர் சொந்த இடங்களில் அனுமதி பெற்று வைத்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்வதற்கு மாறாக, இந்த நீதிமன்ற உத்தரவைக் காரணம் காட்டி வருவாய் துறையினர் கொடி மரங்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துவங்கி உள்ளனர்.


தொழிளாளர்கள் தங்களை சுரண்டுபவர்களை எதிர்த்து, சுரண்டலில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக போராடும்போது விதிக்கப்படும் கெடுபிடிகள் கடுமையானவையாக உள்ளன; அல்லது அனுமதி மறுப்பதாகவும் உள்ளது. அதே நேரத்தில் மக்கள் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் சக்திகள் வழிபாட்டுத்தலங்களுக்கு உள்ளேயே சென்று போராட்டம் நடத்துகின்றன. ஜனநாயக பூர்வமான இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை நடத்த அனுமதி மறுக்கும் போக்கு தமிழ்நாட்டின் ஜனநாயக பண்புகளுக்கு எதிரானதாகும். மக்களின் கேரிக்கையை செவிமடுக்க மறுக்கும் நடவடிக்கையுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அதிகார வர்க்கமும் மக்களுக்கு சேவை செய்வதற்கு தான் என்றால் மக்கள் தங்கள் குரல்கள் கேட்கப்படாத போது மக்கள் மன்றத்தில் அமைதியாக ஒன்று கூடி போராட்டங்கள் மூலம் தெரிவிப்பது ஒன்றே வழி. அந்த வழியை அடைப்பது மிகுந்த ஆபத்தானது.

எனவே அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள போராடும் உரியமையை பறிக்காமல், போராட்டங்களை அனுமதிக்கத் தக்க வகையில் காவல்துறை உயர் அலுவலர்களுக்கு பயிற்சிகள் தேவைப்பட்டால் வழங்கி, அரசியல் அமைப்பு சட்டம் தந்த போராடும் உரிமையை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறோம்.

# இந்தி கற்கும் உரிமை கேட்போர் இந்தியை மறுக்கும் உரிமையையும் தரவேண்டும்



மே.து.ரா.





**படிப்பதால், பயனும் இயலாததால், இழப்பும் இல்லையென்று தெரிந்தும், மூன்றாவது மொழியாக இந்தியும், சமக்கிருதமும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றுக்கு எவ்வளவுதான் முட்டுக்கொடுத்தாலும், முன்னேற்றம் வந்துவிடப் போவதில்லை.**

முன்வைக்கின்ற அடிப்படை நோக்கங்கள் அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்லுமென்றால், இளைஞர்கள் மட்டுமன்றி, மக்கள் கூடத் தாமாக முன்வந்து இந்தி போன்ற மூன்றாவது மொழியினைப் படிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

மூன்றாவது மொழியொன்றை, அதாவது இந்தியினைக் கற்கும் வேண்டல் இல்லாத நிலையிலும், அதற்கான அடிப்படைகள் இல்லாத போதிலும் இந்தி படிக்கவேண்டும் என்று வற்புறுத்துவோர் பொருத்தம் இல்லாத பல காரணிகளை எடுத்துரைக்கின்றனர். இந்தக் காரணிகள் அவ்வப்போது மாறுகின்றன; விளக்கம் தருவோருக்கு ஏற்ப வேறுபடுகின்றன.

ஆனால், இன்று இந்திக்காக வலிந்து பேசுவோர் வரிந்து கட்டிக்கொண்டு கூறுகின்ற அனைத்தும் இதற்கு மாறாகவும் முரணாகவும் இருக்கக் காணலாம்.

1. இந்தி படித்தாகவேண்டும்
2. இந்தி படிக்க முடியும்
3. இந்தி படிக்க வாய்ப்புத் தரவேண்டும்
4. இந்தி கற்காமலிருப்பது பேரிழப்பு
5. இந்தி படித்தோர், படிக்காதோர் என்ற பாகுபாடு கூடாது

என்று பல வகையிலும், வெவ்வேறு நிலைகளில் இந்தி வலியுறுத்தப்பட்டு வருகிறது. மிரட்டலுடன், நிதி உதவி மறுத்தலாகவும் அது மாறிவருகிறது.

இவற்றின் பின்புலத்தில், கீழ்க்கண்டவாறு பல விளக்கங்கள், காரணிகள், அடிப்படைகள், அறிவுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் முன்வைக்கப்படுகின்றன:

1. இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அதனால், இந்தியைக் கற்பது கடமையாகிறது.

2. ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களின் மக்களை இணைப்பதற்கு இந்தி மொழி பயன்படுகிறது.

3. வேற்று நாட்டு மொழியொன்று இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

4. இந்தி திணிக்கப்படவில்லை. இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு இந்திய மொழியினைக்கூடக் கற்றுப் பயன் பெறலாம்.

5. நாடு முழுதும் ஒரே கல்வித் திட்டத்தில் வருவதால், தமிழ்நாடு அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

6. இந்தியைப் புறக்கணிப்பது, இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைக்கு எதிரானது.

7. இந்தியை ஏற்காதது நாட்டுப் பற்று இல்லாததைக் குறிக்கிறது.

8. மக்களாட்சி அமைப்பில் பெரும்பான்மை முடிவை ஏற்கவேண்டும்.

9. மாநில மொழிகளைப் புதிய கல்வித் திட்டம் ஊக்குவிப்பதால், அதன் ஒரு பகுதியாக இருக்கும் இந்தி போன்ற மூன்றாவது மொழியொன்றைப் படிக்கவேண்டும்.

10. செல்வ வளம் கொண்டோர் தனியார் பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தி கற்கின்றனர். ஆனால், அரசுப்பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு இந்தி மறுக்கப்படுகிறது. அதனால், தமிழ்நாட்டில் மும்மொழிப் பாடம் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்.

11. ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளிலும் தமிழக அரசின் பாடத்திட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளிலும் இந்தி மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்படுவதால், ஏற்கனவே இந்தி இருந்து கொண்டிருக்கிறது. அரசுப் பள்ளி ஏழை மாணவர்களுக்கு மட்டும் மறுப்பது கூடாது.

12. நவோதயா வகைப் பள்ளிகள், பிரதமர் (பிஎம்சிறீ) மேன்மைப் பள்ளிகள் போன்றவை தரமான கல்வியினைக் கட்டணமின்றி வழங்குவதால், மும்மொழித் திட்டத்தினை ஏற்றுக்கொண்டால், தமிழ்நாட்டு மாணவர்களும் பயன் பெறலாம்.

13. இந்தியைப் படிக்கும் தன்விருப்ப உரிமையை மாணவர்களுக்கு மறுக்கக்கூடாது.

14. இந்தியைப் படிக்க விடாமல் தடுப்பது புது வகைத் தீண்டாமையாகும்.

15. இந்தி நுழைவதால் தமிழ் மொழிக்கு அழிவு ஏதும் நேராது. இதனால் இந்தி படிப்பதற்குத் தடையில்லை.

16. இந்தி படிக்க விருப்பம் இல்லையென்றால், சமக்கிருதம் படிக்கலாம்.

17. இளம் பருவத்தில் மூன்றாவது மொழியொன்றை பயில்வது எளிதாக இருக்கும். அதனால், இந்தி அல்லது மற்றொரு இந்திய மொழியினைக் கற்பதில் சுமை ஏதுமில்லை.

18. அய்ரோப்பிய நாடுகளில் பல மொழிகளில் கற்றுத் தரப்படுகின்றன அதுபோல இங்கும் கற்க முடியும்.

19. பிற மாநிலங்கள் இந்தியை ஏற்கும்போது தமிழ்நாடு மட்டும் தனித்திருக்கக்கூடாது.

20. ஒன்றிய அரசுப் பணிகள் மற்றும் வங்கி, அஞ்சல், ரயில்வே, படை போன்ற வேறு பணிகளுக்கான தேர்வுகள் பெரிதும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் நடத்தப்படுவதால், இந்தி பயில்வது வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பயனுள்ளதாகும்.

21. பிற மாநிலங்களில் உள்ள தனியார் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு இந்தி மொழிதான் பயன்படும்.

22. தமிழகத்தைச் சார்ந்தோர் பிற மாநிலங்களில் தொழில் தொடங்க வேண்டுமெனில் இந்தி தெரிந்திருக்க வேண்டும்

23. நாட்டை ஒன்றுபடுத்த இந்திதான் அடிப்படையாக இருக்கிறது.

24. இந்தி படிக்காமல் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று விடக்கூடாது

25. அடுத்த சில ஆண்டுகளில் இந்திய ஒன்றியத்தின் தேசிய மொழியாக இந்தி உருவெடுக்கும். அதனால், இன்றைய இளைஞர்கள் இந்தி படித்தாகவேண்டும்.

26. ஒரு மாநிலத்தில் பெரும்பான்மையோர் பேசும் மொழியினை அங்கு வாழும் பிறர் ஏற்றுக்கொள்வது போல, இந்திய ஒன்றிய மாநிலங்களில் பெரிதும் பேசப்படும் இந்தி மொழியினை, அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கடமையாகிறது.

27. தமிழ்நாடு அரசின் இயலாமைகளையும் குறைகளையும் மறைக்கத்தான் இந்தி எதிர்ப்பு முன்னெடுக்கப்படுகிறது.

28. இந்தி மொழி பரப்பு அவையில் (இந்தி பிரச்சார சபா) இந்தி படிப்போர் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் மிகுந்து வருவதால், பள்ளிகளிலேயே இந்தியினைக் கற்றுக் கொடுத்துவிடலாம்.

29. 1960களில் நிலவிய இருமொழிக் கொள்கை என்ற கருத்தாக்கம் காலத்தைக் கடந்து பயனற்றதாகிவிட்டது. இன்றைய வேண்டல்களுக்கு மும்மொழித் திட்டம்தான் வேண்டியதாக இருக்கிறது.

30. மன வளம் எண்ணங்களின் மேன்மை, துய்க்கும் பயன் போன்றவற்றைப் பெற இந்தி பயன்படுகிறது.

இந்தி வணிகர்களிடம் பேசவும், தண்ணீர் பூரி (பானி பூரி) விற்போரிடம் கேட்கவும், வட மாநிலப் பயணிகளுடன் உரையாடவும் இந்தி படிக்கவேண்டும் என்பன போன்ற சிறுபிள்ளைக் கூற்றுக்களை இங்குச் சேர்க்கவில்லை.

இவையெல்லாம் பாரதிய சனதாக் கட்சியின் தமிழகத் தலைவர்களும் ஒன்றிய அமைச்சர்களும் அவ்வப்போது கூறி வருவனவாகும்.

அடிப்படையிலேயே பல்வேறு போக்குகளையும் நோக்குகளையும் பயன்களையும் விரிவாகப் பார்த்த பின்னர், இத்தகைய கூற்றுகளுக்கு விளக்கம் தரவேண்டியதில்லை என்றாலும், சில புரிதல்களுக்காக இவற்றை மேலாய்வு செய்யவேண்டியதாகிறது.

தொடக்கத்தில், அடிப்படையாக வினாக்கள் சிலவற்றை எழுப்பவேண்டியுள்ளது. தேசியக் கல்வித் திட்டத்தில் மூன்றாவது மொழியாக இந்திதான் முன்மொழியப்பட்டிருந்தது. தமிழக அரசின் எதிர்ப்பினையடுத்து, இந்தி அல்லது பிற இந்திய மொழிகளில் ஒன்று எனத் திருத்தப்பட்டது. பிற மாநிலங்கள் மும்மொழிக் கொள்கையை, அதாவது இந்தியை ஏற்றுக்கொண்டுவிட்டதால், இது தமிழ்நாட்டுக்கான தனித் திருத்தம் எனலாம்.

இந்தி பேசாத மாநிலங்கள் மூன்றாவது மொழியாக இந்தியைப் படிக்கவேண்டும் என்பதற்காக இதுவரை சொல்லப்பட்ட காரணிகள் யாவும், அடிப்படைகள் அனைத்தும் இதில் அடிபட்டுப் போய்விடுகின்றன. கடந்த 75 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வந்தவை பொய்யானவைகளாக மாறிவிட்டன. இந்தித் திணிப்பானது, அடுத்து சமக்கிருதத்தை முன்னிறுத்துவதற்கான முதல் முயற்சி என்பது இதிலிருந்து தெளிவாகிவிடுகிறது.

மூன்றாவது மொழியாக இந்தி அல்லாமல், மணிபுரி அல்லது அசாமி போன்ற மொழி ஒன்றைப் பயின்றால் அதனால் தமிழ்நாட்டு மாணவர்கள் பெறக்கூடிய நன்மைகள் யாவை?

பல்வேறு மொழி மக்களை இந்தி இணைக்கும், வேலை வாய்ப்புகள் பெருகும், வணிகம் மேலோங்கும், ஒன்றிய அரசு சார்ந்த போட்டித் தேர்வுகளுக்குப் பயனாகும், வேறு மாநிலங்களில் தொழில் தொடங்க உதவும் என்றெல்லாம் கூறப்பட்டவை உண்மையானவை அல்ல என்பது இப்போது வெளிப்பட்டுவிட்டது. அடிப்படைகளே தகர்ந்துவிடுவதால், மூன்றாவது மொழி என ஒன்று வேண்டியதில்லை என்பதுதான் உறுதிப்படுகிறது.

மேலும், ஒன்றிய அரசின் பாடத்திட்டப் பள்ளிகள், நவோதயா பள்ளிகள், பிரதமர் (பிஎம்ஸ்ரீ) மேன்மைப் பள்ளிகள் ஆகியவற்றிலும் மூன்றாவது மொழியாக இந்தி பயிற்றுவிக்கப்படுகிறது.

இந்தப் பள்ளிகளில் தமிழ்நாட்டில் மட்டுமாவது, இந்திக்கு மாற்றாக வேறு ஏதேனும் ஒரு இந்திய மொழியினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுமா என்பது குறித்தும் தெளிவு பெறவேண்டியுள்ளது.

இந்தி என்ற மூன்றாவது மொழியினை ஏற்றுக்கொண்டால்தான், நவோதயா, பிரதமர் மேன்மைப் பள்ளி ஆகியவற்றைத் தமிழ்நாட்டில் தொடங்க முடியும் என்ற கட்டுப்பாட்டையும் இப்போது தளர்த்திவிடுவார்களா என்ற வினாவுக்கு விளக்கம் எதுவும் கிடைக்கவில்லை.

இந்திய மொழிகளில் ஏதாவதொன்றினை, ஏதோவொரு முறையில் மும்மொழிக் கொள்கையாகத் தமிழ்நாட்டில் புகுத்திவிட்டு, தமிழ்நாட்டின் இரு மொழிக்கொள்கைக்கு மூடுவிழா நடத்திவிட்டு, சில ஆண்டுகள் கழித்து மூன்றாவது மொழி இந்திதான் என்று வற்புறுத்தித் திணிக்கச் செய்யப்படும் மாயமா இது என்ற அய்யமும் எழாமல் இல்லை.

**இந்தித் திணிப்பிற்கே மும்மொழி முழக்கம்!**

வேறு இந்திய மொழிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் கிடைக்கமாட்டார்கள் என்பதால், இந்தியைத் திணிப்பதற்கான மறைமுகத் திட்டம்தான் இது. ஏதாவது ஒரு மொழி என்பதற்குத் தமிழ்நாடு அரசும் மக்களும் தொடர்ந்து அய்யமும் அச்சமும் எதிர்ப்பும் தெரிவிக்கும் நிலையில், இத்தகைய நம்பிக்கை தராத உறுதிமொழிகளை ஏற்க இயலவில்லை.

செல்வ வளம் கொண்டோர் தனியார் பள்ளிகளில் மும்மொழிகளைக் கற்கின்றனர் என்றும், ஏழை மாணாக்கருக்கு இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டு, இரு மொழிகள் மட்டுமே கற்கும் நிலை உள்ளது என்றும் பா.ச.க.வினர் கூறி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களும் பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களும் தெளிவான விளக்கங்களையும் விவரங்களையும் சான்றுகளுடன் தந்த பின்னரும், திரும்பத் திரும்பத் தவறான கருத்துகளையே பரப்பி வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் கூட்டு எண்ணிக்கை ஏறத்தாழ 58,000 ஆகும். இதில் மெட்ரிக் உள்ளிட்ட தனியார் பள்ளிகள் 12,690 என்ற அளவில்தான் உள்ளன. ஒன்றிய அரசின் பாடத்திட்டப் பள்ளிகள் 1,835 மட்டும்தான். அதாவது, 3.16% பள்ளிகள் மட்டுமே மும்மொழிக் கொள்கை என்ற அளவில் மூன்றாவதாக இந்தியைக் கற்பித்து வருகின்றன.

இவற்றிலும்கூட 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் மட்டுமே இந்திப் பாடங்கள் இருக்கின்றன. தெளிவாகச் சொல்வதென்றால், இந்த மூன்று ஆண்டுகளில் அவர்கள் படிக்கும் இந்தி மொழி முழுமையாகப் பேசவும் எழுதவும் தெரியுமளவில் இருப்பதில்லை. அவர்களும் படித்தார்கள் என்று கூறத்தக்க அளவில்தான் இது அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள 53,475 அரசுப் பள்ளிகள், மெட்ரிக் உள்ளிட்ட 12,690 தனியார் பள்ளிகள், ஆக 56,165 பள்ளிகளில் இரு மொழிக் கொள்கைதான் பின்பற்றப்படுகிறது.

தமிழ் அல்லது ஆங்கிலம் என எது பயிற்சி மொழியாக இருந்தாலும், இரு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. இந்தி அல்லது வேறு மூன்றாவது மொழி அந்தப் பள்ளிகளில் இல்லவே இல்லை. மூன்றாவது மொழி என்ற வகையில் இந்தி இல்லாததால், இந்திக்கான தேர்வுகளும் நடத்தப்படுவதில்லை. இதன்றி, தமிழ் கட்டாயப் பாடமாக இருக்கவேண்டும் என்ற அரசாணையும் உள்ளது.

நகரப்புறங்களில் உள்ள மிகச் சில மெட்ரிக் பள்ளிகளில் மட்டும் வேற்று மொழியினருக்கு வாய்ப்புத் தரும் வகையில் தமிழுக்கு மாறாகத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, இந்தி, செர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வாய்ப்பினைத் தவறாகப் பயன்படுத்தி, சில தமிழ் மாணவர்களும் விதிகளைப் புறந்தள்ளித் தமிழுக்கு மாற்றாக வேறு ஏதாவதொரு மொழியினைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அவர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை நிலை.

எனவே, வளமிக்க மாணவர் தனியார் பள்ளிகளில் மும்மொழிகளைக் கற்பதாகவும், ஏழை மாணாக்கருக்கு இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டு, இரு மொழிகள் மட்டுமே படிப்பதாகவும் பா.ச.க. தலைவர்கள் கூறிவருவது முழுமையான பொய்யாகும்.

அத்துடன் விரும்பும் மொழியை, அதாவது இந்தியைப் படிக்கின்ற உரிமை பறிக்கப்படக்கூடாது என்று பா.ச.க. கூறுகிறது.

ஆனால், வேண்டாத மொழியான இந்தியினைப் படிக்க மறுக்கின்ற உரிமையும் வழங்கப்படவேண்டும் என்பதை பா.ச.க. ஏற்றுக்கொள்வதாக இல்லை.

(மேலும் வரும்)

தொடர்புக்கு 9444075561

## கட்சிக் கிளை மாநாடுகள்

**பாரதிநகர்:** திருச்சி மாநகர் மாவட்டம், மணிகண்டம் ஒன்றிய பாரதிநகர் கட்சிக் கிளை மாநாடு நாகரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார் விளக்க உரையாற்றினார். மாநாட்டில் கிளைச் செயலாளராக ஜெயலெட்சுமி, துணைச் செயலாளராக மலர்கொடி, பொருளாளராக பார்வதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சபரிநகர்:** சபரிநகர் கிளை மாநாடு சந்தானசாமி தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன் விளக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக கே.என். ஜெகநாதன், துணைச் செயலாளராக அம்சவள்ளி, பொருளாளராக சந்தானசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.மருதாம்பாள் வாழ்த்திப் பேசினார்.

**உள்ளாட்சிக் கிளை:** உள்ளாட்சிக் கட்சிக் கிளை மாநாடு ஜெயபால் தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன் விளக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக ஜெ.நதியா, துணைச் செயலாளர்களாக ஜெயபால், கங்காதேவி, பொருளாளராக பாப்பாத்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சூரமங்கலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சூரமங்கலம் மண்டல 4வது மாநாடு, இரா.ரமேஷ், ஜெ. மணிகண்டன் தலைமையில், பி.ராதாகிருஷ்ணன் கொடியேற்றி வைத்தார். ஜீவா சிலைக்கு எம்.ராஜமாணிக்கம் மாலை அணிவித்தார். பி.விஜயபாஸ்கர் வரவேற்க, மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ராமன் சிறப்புரையாற்றினார்.

வேலை அறிக்கையை மண்டலச் செயலாளர் பி.அசோக் குமார் வாசித்தார். மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ராமன் சிறப்புரையாற்றினார். மண்டலச் செயலாளராக எம்.கணேசன், துணைச் செயலாளர்களாக ஜெ.மணிகண்டன், கே.ராஜா, பொருளாளராக பி.விஜயபாஸ்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பனமரத்துப்பட்டி, வீரபாண்டி ஒன்றியம்:** பனமரத்துப்பட்டி, வீரபாண்டி ஒன்றிய 30வது மாநாடு கொண்டலாம்பட்டியில் நடைபெற்றது. மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.கண்ணகி துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் அ.மோகன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன், மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் ஆகியோர் பங்கேற்றனர். இதில் ஒன்றியச் செயலாளராக எம்.பாலன், துணைச் செயலாளர்களாக சி.கிருஷ்ணன், எம்.சின்னுசாமி, பொருளாளராக எஸ்.பாலையா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க வேண்டும். காட்டூர் ஏரி, நாழிக்கல்பட்டி ஏரியை தூர்வார வேண்டும். பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கோவில்பட்டியில் இளைஞர் பெருமன்றம் மற்றும் மாதர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டியில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் பயணியர் விடுதி முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்றம் நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாதர் சங்கம் நகரச் செயலாளர் விஜயலட்சுமி முன்னிலை வகித்தார்.

இளையரசனேந்தல் சர்வீஸ் சாலையைப் போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்த வேண்டும், மந்தித்தோப்பு சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

சாலைகளில் இருபுறமும் இருக்கும் மணல் திட்டுக்களை அகற்ற வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்திக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் பாபு, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

இதில் சிபிஐ நகரக் குழு உறுப்பினர்கள் அலாவுதீன், செல்லையா, சுப்பிரமணி, இளைஞர் பெருமன்றம் மாவட்டக் குழு உறுப்பினர்கள் மணிகண்டன், மகேந்திரன், நகரக் குழு உறுப்பினர் விநாயக மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இ.எஸ்.ஐ மருத்துவமனைப் பணிகளைத் துவங்க சிபிஐ மாவட்டக் குழு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கன்னியாகுமரி மாவட்டக் குழு கூட்டம் ஆரல்வாய்மொழியில் கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் சிறப்புரையாற்றினார்.

இதில் இ.எஸ்.ஐ மருத்துவமனைப் பணிகளை உடனடியாகத் துவங்க வேண்டும். சாலை ஒப்பந்தத்தைப் பணிகளில் பொறியியல் பட்டதாரி மற்றும் பட்டயச் சான்று பெற்றவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம்நிதி வழங்கி, சாலைகள் அமைக்க அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும். ஆரல்வாய் மொழி இரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல, ரயில்வே துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குடிநீர் இணைப்பிற்குக் கட்டாய வசூல் செய்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் வாடியூர் ஊராட்சியில், ஜல் ஜீவன் திட்டத்தின் வழங்கப்படுகின்ற குடிநீர் இணைப்பிற்குக் கட்டாய வசூல் செய்வதை எதிர்த்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக அருகில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமையில் கட்சியின் பகுதிக் குழு உறுப்பினர் இளங்கோவன், கல்யாணி, நாட்டாமை சங்கரன், சந்தோஷம் பிள்ளை, ஐ.கே.மாரிமுத்து ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## பாவை அச்சக தொழிலாளர் டி.கலாவுக்கு அஞ்சலி



பாவை அச்சகத்தில் துப்புரவுப் பணி செய்து வந்த டி.கலா (வயது 57) 24.2.2025 திங்கட்கிழமை அன்று திடீர் மாரடைப்பால் காலமானார். அன்னாரின் இறுதிச்சடங்கு 26 ஆம் தேதி நடைபெற்றது. இறுதி நிகழ்ச்சியில் பாவை அச்சகம் மற்றும் ஜனசக்தி சார்பில் தோழர்கள் மலர் மாலை வைத்துத் தங்களது அஞ்சலியைச் செலுத்தினர். மறைந்த கலா அவர்களுக்கு புஷ்பராஜ் என்ற மகனும், சத்தியா என்ற மகளும் உள்ளனர். அம்மாவைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும் பாவை அச்சகம் மற்றும் ஜனசக்தி சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




உலகத் தொழிற்சங்கம் சார்பில் வியட்நாம் ஹனோய் நகரில் நடைபெறும் கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் சி.ஹெச்.வெங்கடாசலம் கலந்து கொண்டு பேசியபோது.

## நூலகக் கட்டிடத்தை இடித்த ஊராட்சி ஒன்றிய ஆணையரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், மகராஜபுரத்தில் இயங்கி வந்த நியாய விலைக்கடை கட்டிடம் பழுதடைந்து விட்டது. இதனால், நூலகத்திற்குக் கட்டப்பட்ட கட்டிடம் காலியாக இருந்ததால், பொதுமக்கள் விருப்பத்திற்கிணங்க நியாய விலைக்கடை அங்கு மாற்றப்பட்டது. இதற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் எதிர்ப்பு தெரிவித்தார். மக்களின் நலன் கருதி அங்குதான் செயல்படும் என்று கூறியதால் ஆத்திரமடைந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், புல்டோசர் வரவழைத்து நூலகக் கட்டிடத்தை இடித்துத் தரைமட்டமாக்கினார்.

இதை அறிந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளர் சுந்தர்ராஜன் தலைமையில், ஊராட்சி ஒன்றிய ஆணையரின் ஆணவப் போக்கைக் கண்டித்தும், அவரது மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி. வட்டச் செயலாளர் கோவிந்தன், துணைச்செயலாளர் மகாலிங்கம் உள்ளிட்டோர் பேசினார்கள்.

## மணிகண்டம் ஒன்றியத்தில் கிளை நிர்வாகிகள் கூட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிளை நிர்வாகிகள் கூட்டம், ஒன்றியப் பொருளாளர் கே.என்.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் எம்.ஆர். முருகன், உரையாற்றினார். கூட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எம்.மருதாம்பாள், எம்.ரஜியாபேகம், தரைக்கடைச் செயலாளர் கே.மேகராஜ் ஆகியோர் உரையாற்றினார்கள். கூட்டத்தில் ஒன்றிய மாநாடு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## டெங்குக் கொசுப் புழு ஒழிப்புப் பணியாளர்களுக்கு நிரந்தரப் பணி வழங்க டாக்டர் ஏ.ஆர்.சாந்தி வலியுறுத்தல்



தமிழ்நாடு டெங்குக் கொசுப்புழு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள், நிர்வாகிகள் கூட்டம், விழுப்புரத்தில் 02.03.2025 அன்று நடைபெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து இச்சங்கத்தின் கௌரவத் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு டெங்குக் கொசுப்புழு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள் தமிழகம் முழுவதும் சுமார் 38,000 பேர் சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாக, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றார்கள்.

இவர்கள் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறையின் கீழ் கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருகிறார்கள்.

கொசுக்களால் பரவும் டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா, ஜப்பானிய மூளைக்காய்ச்சல், யானைக்கால் நோய் போன்ற நோய்களைத் தடுத்திட, கொசுப்புழு ஒழிப்புப் பணிகள், மருந்து அடித்தல் போன்ற பணிகளையும் செய்து வருகிறார்கள்.

இவர்களுக்குத் தமிழக அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தில், மூன்றில் ஒரு பங்கு அல்லது பாதிச் சம்பளம் மட்டுமே வழங்கப்படுகிறது. அகவிலைப்படி வழங்கப்படுவதே இல்லை.

இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக, 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறையின் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணய ஆணையை நடைமுறைப் படுத்த வேண்டும். இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும். பணி நிரந்தரம் செய்திட வேண்டும். இப்பணியாளர்கள் அனைவரையும் மருத்துவத்துறை பணியாளர்களாக, நோய்த்தடுப்பு மற்றும் பொதுச் சுகாதாரத் துறையின் கீழ் கொண்டுவர வேண்டும்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் செவிலியர்கள் மருத்துவத்துறை பணியாளர்களுக்கான புதிய பணியிடங்களை உருவாக்கி அவ்விடங்களில் நிரந்தரப் பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் எனக் கூறினார்.

அப்போது ஏஐடியுசி விழுப்புரம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ஏ.சௌரிராஜன், தமிழ்நாடு டெங்குக் கொசுப்புழு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.ஜெயவேல், மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.சதீஸ், பொருளாளர் க.பூமிநாதன், மாநிலத் துணைச் செயலாளர் மா.செந்தில்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தனியார் பிளாஸ்டிக் கம்பெனி கழிவுகளால் கால்நடைகள் உயிரிழப்பு

## நடவடிக்கைக் கோரி சிபிஐ ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தாலுகா, வெண்டையம்பட்டி கிராமத்தில் இயங்கி வரும், சோழா எக்கோ பாலிமர்ஸ் நிறுவனத்திலிருந்து வெளியேறும் பிளாஸ்டிக் கழிவுகள் ஊராட்சியின் பொதுக் குட்டையில் சென்று சேர்கிறது. இந்தக் கழிவு நீரை அருந்திய 10 க்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள் உயிரிழந்துள்ளன. இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், மாவட்ட நிர்வாகம் இந்நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.முகில், நிர்வாகிகள் எம்.ஐயாராசு, வி.ராமமூர்த்தி, கே.மாரிமுத்து, என்.முத்துலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருச்சியில் சிறுகடை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்



தெருவோரத் தரைக்கடை, சிறுகடை வியாபாரிகளை முறையாகக் கணக்கெடுத்து, அனைவருக்கும் வியாபாரச் சான்று (ஸ்மார்ட் கார்டு) வழங்க வேண்டும், கணக்கெடுப்புப் பட்டியலை வெளியிட்டு, ஒப்புதல் பெற்று வணிகக் குழுத் தேர்தலை நடத்த வேண்டும். தெரு வியாபாரிகள் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை அதிகாரிகளின் சட்ட விரோத மற்றும் அத்துமீறல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும், தமிழ்நாடு முழுவதும் ஏஐடியுசி தலைமையிலான சிறுகடை வியாபாரிகள் சங்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி ராமகிருஷ்ணா தியேட்டர் மேம்பாலம் அருகில், சங்கத் தலைவர் எஸ்.சிவா தலைமையில் நடைபெற்றது. திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்சர்தீன், கட்டட சங்க மாவட்ட தலைவர் முருகன், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் ராஜா உள்ளிட்டோர் உரையாற்றினர். இதில் சங்கத்தின் நிர்வாகிகள் சரவணன், மேகராஜ், சந்தோஷ், சுரேஷ்முத்துசாமி, அபுதாகிர் ஆகியோர் பங்கேற்றனர்.

# 100 நாள் வேலை ஊதிய பாக்கி கேட்டு விதொச முற்றுகைப் போராட்டம்



தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100 நாள் வேலை ஊதிய பாக்கி கேட்டு, மாவட்டச் செயலாளர் அ.ரெங்கராஜ் தலைமையில் நடைபெற்ற முற்றுகை போராட்டத்தை, மாநிலப் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் தொடக்கி வைத்து பேசினார்.

கோரிக்கைகளை விளக்கி மாநிலக் குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர் டி.செல்வகுமார், துணைத் தலைவர் பி.சுந்தரராஜ், மாவட்டப் பொருளாளர் ஜெயமாலை பிச்சை, கட்சியின் மாவட்டப் பொருளாளர் என்.ஆர்.ஜீவானந்தம், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் பா.ஜீவானந்தம், கட்சியின் மாநகர துணைச் செயலாளர் பா.பாண்டியராஜன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

# மதுக்கடையை அகற்றக்கோரி சிபிஐ தெருமுனைப் பிரச்சாரம்



மாநகராட்சிப் பகுதிகளில் 300 மீட்டருக்குள் மதுக்கடைகள் இயங்கக் கூடாது என்கிற சட்ட விதிகளை மீறி, புத்தூர் நால்ரோடு பஸ் நிறுத்தம் அருகிலேயே மதுக்கடை இயங்குவதால், தினசரி சண்டை, சச்சரவுகளால் அனைவரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் புத்தூர் மதுபானக் கடையை அகற்றக்கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், தெண்ணூர் ஹைரோடு பகுதியில் நடைபெற்ற மக்கள் திரள் கூட்டத்திற்கு, மேற்குப் பகுதி குழு உறுப்பினர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். கிளைச் செயலாளர் ரஹீம் கான், பழனி பாரதி முன்னிலை வகித்தனர். திருச்சி மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மேற்குப் பகுதிச் செயலாளர் சுரேஷ் முத்துசாமி, இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் தர்மா, பாட்ஷா, மாதர் சம்மேளன நிர்வாகிகள் ஆயிஷா, சுமதி, ஈஸ்வரி, ஏஐடியுசி நிர்வாகி துரைராஜ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கச் செயலாளர் சூர்யா உள்ளிட்டோர் உரையாற்றினர்.

# செங்கோட்டையில் ஒன்றிய பட்ஜெட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தமிழக அரசுக்கு, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை வழங்க வேண்டும், கனிமவளக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும், மும்மொழித் திணிப்பைக் கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஏஐடியூசி மாவட்ட கௌரவத் தலைவர் ஏ.சாமி தலைமையில் சிபிஐ மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, வி.ச மாவட்டச் செயலாளர் எஸ்.வேலாயுதம், விதொச மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா மற்றும் பி.எஸ்.எஸ்.போஸ், எஸ்.சுந்தர், சி.சுப்பிரமணியன், எஸ்.மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்

# உலகத் தாய்மொழி நாள்



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், இந்தியக் கலாச்சார நட்புறவுக் கழகமும் இணைந்து, கோவை மாநகராட்சியின் ஆதரவுடன், பிப்ரவரி 21 அன்று உலகத் தாய்மொழி நாள் கோவை பி.என்.புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கொண்டாடியது. ஓவியம், பேச்சுப் போட்டிகளில் 130 மாணவர்கள் ஆர்வமாகப் பங்கெடுத்தனர். பரிசளிப்பு விழாவிற்கு, கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி தலைமை தாங்கினார். பல்சமய நல்லுறவு இயக்கத்தின் மாநிலத் தலைவர் ஹாஜி முகமது ரஃபி பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், சிறார்ச் செயல்பாட்டாளர் நான்சி கோமகன், நாடகவியலாளர் த.திலிப்குமார், பள்ளியின் தலைமையாசிரியர் ஜமுனா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பெருமன்ற துணைச் செயலாளர் ஜான் நன்றி கூறினார்.

## மார்ச் 23 பகத்சிங் நினைவு நாளில் நடைபெறும்

# இரத்த தான முகாமில் பங்கேற்க ஏஐஎஸ்எஃப் முடிவு



அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் செங்கல்பட்டு மாவட்டக் குழு கூட்டம் மாவட்ட தலைவர் எம்.கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஜெ.அஜித்குமார் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநிலத் தலைவர் க.இப்ராகிம் மாநிலக் குழு முடிவு மற்றும் இரத்ததான முகாம் குறித்து விளக்கிப் பேசினார். இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத் துணைத்தலைவர் மோ. வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டப் பொருளாளர் பி.வெற்றிவேல் நன்றி கூறினார்.

# ஆண்டிபட்டி பேரூராட்சிக் கூட்டத்திலிருந்து சிபிஐ கவுன்சிலர் வெளிநடப்பு



ஆண்டிபட்டி பேரூராட்சி 10 வது வார்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன், தனது வார்டில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வலியுறுத்தி, அவர் கொடுத்த தீர்மானங்களில் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறவில்லை, 10 வது வார்டை வேண்டுமென்றே தொடர்ந்து பேரூராட்சி தலைவர் புறக்கணித்து வருகிறார். இதைக் கண்டித்து மன்றக் கூட்டத்தினிலிருந்து கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன் வெளிடப்பு செய்தார்.

## தருமபுரி மாவட்டக் குழு உறுப்பினர் தர்மராஜா

# வீதியில் கிடந்த ரூ.50,000 போலீசில் ஒப்படைத்தார்



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர துணைச் செயலாளர், மாவட்டக் குழு உறுப்பினர் மற்றும் பத்திரிகைத் துறையில் செய்தியாளராகவும் பணிபுரிந்து வருபவர் இல.தர்மராஜா, இவர் 24.02.2025 அன்று பென்னாகரம் கடைவீதியில் நடந்து வந்து கொண்டு இருந்தார். அப்போது சாலை ஓரமாக ஒரு பை இருந்துள்ளது. அதைப் பார்த்த அவர் பையை எடுத்துப் பார்த்துள்ளார். அதில் 500 ரூபாய்த் தாள்கள் கொண்ட ஒரு பண்டல் பணம் இருந்துள்ளது. அதை எண்ணிய போது ரூ.50 ஆயிரம் இருந்தது.


இந்தப் பணத்தை யாரோ தவறவிட்டதை அறிந்த அவர், பென்னாகரம் பத்திரிகையாளர்கள் மன்ற நிர்வாகிகளுடன் சென்று டிஎஸ்பி மகாலட்சுமியிடம் ஒப்படைத்தனர். போலீசார் விசாரணை மேற்கொண்டதில், அருண்குமார் (27) என்பவர், வங்கியில் நகை அடமானம் வைத்து, பணத்தைப் பெற்றுச் செல்லும் போது, தவறவிட்டது தெரிய வந்தது. பென்னாகரம் டிஎஸ்பி விசாரணை செய்து பணத்தை விவசாயி அருண்குமாரிடம் ஒப்படைத்தார்.

பணத்தை, காவல்துறையிடம் ஒப்படைத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர துணைச் செயலாளர் தர்மராஜாவைப் பொதுமக்கள், போலீசார், அருண்குமார் குடும்பத்தினர் ஆகியோர் வெகுவாகப் பாராட்டினார்கள்.

கம்யூனிஸ்ட்களின் நேர்மைக்கு இதுஓர் உதாரணமாக.

# நூல் நயம்

## தரையைத் தழுவும் மேகங்கள் ஐரோப்பியப் பயணக் கட்டுரை




உலகத்தை இறுக்கப் பூட்டி இருக்கும் கதவுகளை எல்லாம் அடித்துத் திறப்பவை பயணங்கள். பயணங்களின் மூலமாகத்தான் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், பன்முகத் தன்மைகள், அழகு, அவலட்சணங்கள், ஏற்றத் தாழ்வுகள், செய்ய வேண்டியவை, செய்யத் தவறியவை, செய்யக்கூடாதவை என அனைத்தையும் ஒருவர் காண முடியும். இதனை இரண்டு ஜோடி கண்கள் பார்த்தால் மட்டும் போதாது, அதனை உலகத்தில் இருக்கிற பல கோடி கண்களும் பார்க்க வேண்டும் என்றால், அது பயணக் கட்டுரையாக விரியும் போதுதான் சாத்தியமாகும். அப்படிப் பயனளிக்கிற ஒரு பயணக் கட்டுரைதான், கவிஞர் சி.ராமலிங்கம் எழுதிய இந்த நூல்.

அவர் அங்கு பயணம் செய்த 20 நாட்களில், தினமும் தான் பார்த்த இடங்களைக் குறிப்பெடுத்து, அன்றன்றைக்கு அவற்றைப் பதிவு செய்து இந்நூலை எழுதியிருக்கிறார். இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரம், முரானோ, புரானா தீவுகள், வெனிஸ் பேலஸ், தேவாலயங்கள், மியூசியம், பல்கலைக்கழகம், பூங்காக்கள், வாடிகன் நகரம், ஈபிள் கோபுரம், நாத்தர்டாம், மோனாலிசா ஓவியம், சாய்ந்த கோபுரம் எனத் தான் கண்ட காட்சிகள் குறித்து அருமையாகப் பதிவு செய்துள்ளார்.

மிலான் நகரில் அவர் சாப்பிட்ட க்ரோசாய்ண்ட் உணவும், காப்பியும் நம்மையும் சாப்பிடத் தூண்டுகிறது. பலதரப்பட்ட மனிதர்கள், வேறு வேறு மொழிகள், அவர்களது உரையாடல், சிரிப்பு, மகிழ்ச்சி, ரசிப்பு, அடடா! வாழ்க்கையின் அளப்பரிய மகிழ்ச்சியான நேரம் அது! தமிழ்நாட்டின் எளிய குக்கிரமத்தில் பிறந்த ஒரு மனிதன், வெனிஸ் நகர வீதிகளில் கைவீசி நடந்த அழகு நம்மை ரசிக்கத் தூண்டுகிறது. மூன்று நாடுகள், மூன்று தலைநகரங்கள், மூன்று உலக அதிசயங்கள், இவற்றைப் பார்ப்பதற்கு நாமும் 18 ஆயிரம் கிலோமீட்டர் இவருடன் பயணம் சென்ற அனுபவத்தை இந்நூல் தருகிறது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

– சமரன்

**நூலாசிரியர்** : கவிஞர் சி.இராமலிங்கம்
**பக்கம்** : 56 விலை : 50
**வெளியீடு** : பதிவுகள், எண் 4/ 46 முதல் மாடி, ஓ.எம்.ஆர்.ரோடு, திருப்போரூர்.

## நல்வழி காட்டிய ஔவையார்




உலகத்தின் தொன்மையான மொழிகளில் ஒன்று தமிழ், அதனால்தான் தமிழ் மொழி செவ்வியல் மொழி என்றும், செம்மொழி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மொழியை இளமை குன்றாமல் செழுமையோடு வளர்த்த பல்வேறு தமிழ் அறிஞர்கள் உள்ளனர். அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர் ஔவை பெருமாட்டி, உலக இலக்கியங்களில் ஆண் புலவர்களைத்தான் நாம் பெரும்பாலும் அறிய முடியும். ஆனால், தமிழ் இலக்கியத்தில் மட்டும்தான் ஆண் புலவர்களுக்கு நிகரான, பெண் புலவர்கள் பலரையும் நாம் அறிந்துகொள்ள முடியும். அவர்களுடைய இலக்கிய அறிவை நாம் பெற்று பயன் பெற முடியும். அத்தகையவர்களில் முதன்மையானவர் ஔவையார்.

அவரது பாடல்களில் சமூக அநீதிக்கு எதிரான கோபக் கணல்களை நம்மால் காண முடியும், அதேபோன்று அன்பையும், அறத்தையும் பாடியவர் அவர். பொன்னுக்கும், பொருளுக்கும் பாடியவர்கள் மத்தியில், கூழுக்குப் பாடியவர் ஔவையார் என்பதை அறிகிற போது, அவர் எளிய மக்களின் கவிஞராக, புலவராக இருந்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று கல்வியின் அவசியத்தை அன்றே வலியுறுத்தியவர். அந்தக் காலத்திலேயே சாதி "இரண்டொழிய வேறில்லை" என ஆண், பெண் என்ற இரண்டு சாதியைத் தவிர வேறில்லை என்று பாடிய புரட்சிக்கவி ஔவையார்

"ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய். இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய்". அப்படி இருக்கையில் ஏன் மற்றவனை ஏய்த்து வாழ வேண்டும் எனச் சுரண்டலை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் ஔவையார். அவரைச் சமதர்மப் பாட்டி என்றும் நாம் சொல்லலாம். ஔவையின் கருத்துகளை நூலாசிரியர் அழகாக எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர்** : பசுமைக்குமார்
**பக்கம்** : 79 விலை : 80
**வெளியீடு** : ராகுல்ஜி கல்வி அறக்கட்டளை, 233, வாசுகி நகர், 3 வது தெரு, வள்ளுவர் காலனி, தபால் தந்தி நகர், மதுரை–625017

# புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தனி நலவாரியம் அமைத்திடுக!

### ஏஐடியூசி தீர்மானம்




தமிழ்நாடு ஏஐடியூசி சார்பில் புலம் பெயர் தொழிலாளர் பாதுகாப்பு கருத்தரங்கம் திருப்பூர், ஊத்துக்குளி சாலை ஏஐடியூசி அலுவலகக் கூட்ட அரங்கில் 23.02.2025 அன்று நடைபெற்ற போது புலம்பெயர் தொழிலாளர் சட்டத்தை அமலாக்கி, அத்தொழிலாளர்களை உழைப்புச் சுரண்டலில் இருந்து விடுவிக்கவும், அவர்கள் குறைகளைத் தீர்க்கவும் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறையில் தனிப்பிரிவு அமைத்திடுக, தனி நல வாரியம் அமைத்திடுக என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருத்தரங்கிற்கு தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையேற்றார். பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். திருப்பூர் மாவட்டப் பொதுச்செயலாளர் பி.ஆர்.நடராஜன் வரவேற்றார். தேசியச் செயலாளர் வகிதா நிஜாம் துவக்கி வைத்துப் பேசினார். மாநிலச் செயலாளர் ஆ.பாஸ்கர் விளக்க உரையாற்றினார். தேசிய துணைத்தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. நிறைவுரையாற்றினார்.

புலம் பெயர் தொழிலாளர் ஒருங்கிணைப்பாளர் கே.நடராஜன் நன்றி கூறினார். மாநிலச் செயலாளர்கள் என்.சேகர், எஸ்.சின்னசாமி, பொருளாளர் பீட்டர், துணைத் தலைவர்கள் எம்.சங்கையா, என்.செல்வராஜ், எம். ஜகாங்கீர், ஊரக வளர்ச்சி தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் எஸ்.கிருஷ்ணசாமி, உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களின் புலம் பெயர் தொழிலாளர்கள், தமிழ்நாடு முழுவதும் இத்தொழிலாளர்களை ஒருங்கிணைக்கும் ஏஐடியூசி மாவட்ட நிர்வாகம் உள்பட 300 பேர் பங்கேற்றனர்.

இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து வந்து தமிழ்நாட்டில் பணிபுரியும் 50 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் உள்ளனர். குறைந்த கூலிக்கு, கூடுதல் நேரம் கடுமையாக உழைப்பவர்கள் என்று வெளிப்படையாகவே கூறியே இத்தொழிலாளர்கள் தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இவர்களில் மிகப்பெரும்பாலான தொழிலாளர்கள் புலம்பெயர் தொழிலாளர் சட்டம் 1979 இன் படி அவர்கள் சொந்த மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் பதிவு செய்யப்படாமல் பணிபுரிகின்றனர். ஊதியம், பணிப் பாதுகாப்பு, பணியிடப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, குடியிருப்பு, குழந்தைகள் கல்வி உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் இவர்கள் பணிபுரிய நிர்பந்திக்கப்படுவது ஏற்புடையதல்ல.

இத்தொழிலாளர்களைச் சுரண்டலில் இருந்து விடுவிக்க ரயில் நிலையங்களில் வந்து இறங்கும் போதும், பணியிடங்களிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் இத்தகைய விவரங்களைச் சேகரிக்கும் பணி அவசியமானதாகும். அதனை தொழிலாளர் துறை மூலம் மட்டுமே தொழிற்சங்கங்கள் உதவியுடன் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காவல்துறை பயன்படுத்தக் கூடாது.

எனவே, இத்தகைய நிலையில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறை தமிழ்நாட்டில் உள்ள புலம் பெயர் தொழிலாளர்கள் அனைவரையும் கணக்கெடுத்து, பட்டியலிட்டு அவர்களது சொந்த மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் பதிவு செய்து, அடையாள அட்டை வழங்க வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்களின் படியான உரிமைகள் அனைத்தையும் உறுதி செய்வதற்கு ஏற்ப தொழிலாளர் நலத்துறையில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் தலைமையில் புலம்பெயர் தொழிலாளர் பிரிவை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும். அரசு, வேலை அளிப்பவர், தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்ட முத்தரப்புக் குழு அமைத்து அவ்வப்போது இத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விவாதித்து, தீர்வு காணமுன்வர வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

அதைப்போல தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்து சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசை இக்கருத்தரங்கு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

# மாவட்ட ஆட்சியரின் பொறுப்பற்ற பேச்சுக்கு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கண்டனம்

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் பொறுப்பற்ற பேச்சுக்கு இந்திய மாதர் தேசியச் சம்மேளன, தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மு.கண்ணகி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 16 வயது நிரம்பிய சிறுவனால், அங்கன்வாடிக்குச் செல்லும் 3 1/2 வயதே ஆன சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு நலக்குழு சார்பில், காவல் ஆய்வாளர்களுக்கான போக்சோ குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பேசிய ஆட்சியர் மகாபாரதி, குறைந்தபட்ச மனிதாபிமானம் கூட இல்லாமல், பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட குழந்தையின் மீதும் தவறு உள்ளது என்று பேசியுள்ளார்.

அவர் பேசியதற்கும், அவர் வகிக்கும் பொறுப்புக்கும் தகுதியற்றவராக இருக்கிறார். பாதிக்கப்பட்ட குழந்தையின் மீதும் தவறு உள்ளது. பாதிக்கப்பட்ட குழந்தை, சிறுவன் முகத்தில் எச்சில் துப்பியதுதான் காரணம், இரண்டு பக்கமும் நாம் பார்க்க வேண்டியது இருக்கிறது எனச் சப்பைக்கட்டு கட்டுகிறார். போக்சோ வழக்கில் எப்படி ஒரு மாவட்ட ஆட்சியர் பொறுப்பில்லாமல் இப்படிக் கட்டப்பஞ்சாயத்து பேச முடியும்? அவர் பேசியதை அந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற மற்ற அதிகாரிகளும் கண்டும் காணாமல் கடந்து செல்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

விழிப்புணர்வு கொடுக்கும் நிகழ்ச்சியிலேயே எந்தவிதமான சட்ட அறிவும் இல்லாமல், மாவட்ட ஆட்சியரே பேசியிருக்கிறார் என்றால், அவர் எப்படி பொறுப்பான ஆட்சியராக இருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

தமிழக அரசு ஆட்சியரைப் பணியிட மாற்றம் செய்தது மட்டும் போதாது அவர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், பாலியல் சம்பந்தமான வழக்குகளில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமெனவும், தமிழ்நாடு முழுவதும் குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதை கவனத்தில் கொண்டு, இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது உடனடியான சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்துகிறது எனத் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்நிலையில் அந்த மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு அரசு இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது.

# திருமருகல் திட்டச்சேரி எஸ்.வி.பக்கிரிசாமி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் நாகபட்டினம் மாவட்ட முன்னோடி தலைவர் எஸ்.வி.பக்கிரிசாமி (89) 28.02.2025 அன்று காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த வருத்தமளிக்கிறது. இவர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் வட்டம், திருமருகல் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் கட்சி அமைப்பையும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் அமைப்புகளையும் கட்டியமைக்கப் பெரும் பங்காற்றியவர்.

இவரது வாழ்விணையர் கோவிந்தம்மாள் சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகி விட்டார். இவர்களுக்கு கலைவாணி, வெங்கடேஸ்வரி ஆகிய இரண்டு மகள்களும், ஏங்கல்ஸ், தங்கமணி, சங்கர் என மூன்று மகன்களும் இருக்கின்றனர். பொதுவாழ்வில் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிய எஸ்.வி.பக்கிரிசாமி, பொதுமக்களின் நன்நம்பிக்கையைப் பெற்றுத் திகழ்ந்தவர். அவரது இழப்பு எளிதில் ஈடு செய்ய முடியாதது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு, தோழர் எஸ்.வி.பக்கிரிசாமி நினைவுகளுக்கு செவ்வணக்கம் கூறி, அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இளைஞர் பெருமன்றம் முற்றுகைப் போராட்ட படங்கள்



திருச்சி



செங்கல்பட்டு



நெல்லை


சேலம்



திருப்பத்தூர்



நீலகிரி



ஈரோடு



கோவை


கோவில்பட்டி


விருதுநகர்



சென்னை


கடலூர்



தேனி



மேலூர்

ஜனசக்தி
JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.
Day of Publication: Every Thursday WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026 Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

## பெண்களை இழிவுபடுத்தும் சீமானுக்கு எதிராக

# மாதர் சம்மேளனம் கண்டன ஆர்ப்பாட்டம்






நடிகையைத் திருமணம் செய்வதாகக் கூறி வன்புணர்வு செய்து ஏமாற்றிய வழக்கு தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தற்போது ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் ஆபாசமாகவும், இழிவாகவும் பேசியிருப்பது கண்டனத்திற்கு உரியதாகும். சீமானின் இந்த இழிவான பேட்டிகளுக்குத் துணை நிற்கும் பெண்கள், தங்களையும் சேர்த்துதான் அவர் இவ்வாறு இழிவாகவும் கொச்சையாகவும் பேசுகிறார் என்பதை அறிந்து கொள்ளாமல் இருப்பது வருத்தமளிக்கிறது. சீமான் தொடர்ந்து பொதுவெளியில் எல்லை கடந்து அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமாகவும், கீழ்த்தரமாகவும் பேசி வருகிறார்.

இவரெல்லாம் ஒரு அரசியல் கட்சியின் தலைவராக இருப்பது தமிழ்நாட்டிற்கே தலைக்குனிவு. பாதிக்கப்பட்ட பெண்ணை அவமதிப்பது மட்டுமல்லாமல் பெண் இனத்தையே சீமான் அவமதிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பொது வெளியில் நாகரிகமற்ற முறையில் நடந்து கொள்வதோடு, பாதிக்கப்பட்ட பெண்ணை அவமானப்படுத்தும் விதமாக நக்கல் செய்து, ஏளனமாக நடந்துகொள்வதும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி தண்டனைக்குரியது.



பெண்களைத் தொடர்ந்து இழிவுபடுத்திப் பேசி வரும் சீமான் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் த.செண்பகம் தலைமையில், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் வடசென்னை மாவட்டக் குழு சார்பாக வியாசர்பாடி அம்பேத்கர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாநிலத் தலைவர் ஜி.மஞ்சுளா கண்டன உரையாற்றினர். கூட்டத்திற்கு சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ரேணுகா முன்னிலை வகித்தார். இறுதியாக அ.சரவணகுமாரி நன்றியுரை கூறினார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சீமானைக் கண்டித்துக் கண்டன முழக்கம் எழுப்பினர்.

---

## தமிழ்மக்கள் மீதான இந்தி, சமஸ்கிருத மொழி திணிப்பை எதிர்த்து

# இளைஞர் பெருமன்றம் முற்றுகைப் போராட்டம்

**தே**சியக் கல்விக் கொள்கையின் மும்மொழி திட்டத்தை ஏற்றுக்கொண்டால் தான் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ஒருங்கிணைந்த கல்வி திட்டத்திற்கான நிதியை வழங்குவோம் இல்லையென்றால் வழங்க முடியாது என ஆணவமாக பேசிவரும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மத்தியஅரசு அலுவலகங்கள் முன்பு ஒன்றி அரசு அலுவலகங்கன் முன்பு முற்றுகைப்போராட்டங்கள் நடத்தப்பட்டன.







Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.